பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | வைகாசி 24 | புதன்கிழமை | 07.06.2023 | கதிர் 209

# அரசியல்வாதிகள் அனைவருமே வரிகோப்புத் திறப்பது கட்டாயம்

## நிதி இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 07

அரசியலில் பிரவேசிக்கும் அனைவரும் வரிக்கோப்பொன்றைத் திறப்பது கட்டாயமென நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத்தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்கும் போது அச்செயற்பாடு ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் இடம் பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் வரி விதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படும் 14 வகையானவர்களுக்கான கோப்புகளைத் திறப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அமைச்சுப் பணியாளர்கள் வரிக் கோப்புகளைத் தொடங்குவதும் கட்டாயமாக்கப்படவுள்ளது.

☞2



# விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் இடம்பெற்ற 6 பேரின் கொலையுடன்தொடர்புடைய பிரதான சந்தேக நபரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

அறுவரின் கொலை தொடர்பான வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மூவரிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டன.

அதன் பின்னர் சந்தேக நபரை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு,நீதவான்கஜநிதி பாலன் உத்தரவிட்டடார். வழக்கு விசாரணைகளும் அன்றைய தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி அதிகாலை நெடுந்தீவில் 5 பேர்வெட்டிகொல்லப்பட்டனர். சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில்சிகிச்சை பெற்றுவந்த 101வயதுமூதாட்டியும் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர்களில் 4 பெண்களும் 2 ஆண்களும் அடங்குகின்றனர்.

# பெற்றோருக்கு பொலிஸாரின் அறிவுரை

பாடசாலை மாணவர்களுக்காகமின்னஞ்சல்கணக்குகளை உருவாக்கும்போது பெற்றோரின் தகவல்களை உள்ளீடுசெய்யாது மாணவர்களின் சரியான வயது உள்ளிட்ட தகவல்களை வழங்குமாறு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் நல்லிணக்கம் மற்றும்தேசியஒற்றுமைபற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் இணையவழிக் கல்வி பிரபலமடைந்தமையால் பிள்ளைகளின் பயன்பாட்டுக்காக கையடக்கத்தொலைபேசிகள் உள்ளிட்ட கணினி சாதனங்களை அவர்களுக்கு வழங்கவேண்டியஅவசியம் ஏற்பட்டிருப்பதாக

☞2

# இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் அரசியல்பீடக் கூட்டம் நேற்றுக் கொழும்பில் நடந் தது. கட்சித் தலைவர் மாவை சோ.சேனாதிராசாவின் கட்டளையின் பேரில் பதில் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத்தால் இந்தக் கூட்டத்திற்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. கட்சியின் பெருந் தலைவர் சம்பந்தன் கூட்டத்தைக் கூட் டச் சொன்னார் என்பதாக விடயதான விளக்கம் கொடுக்கப்பட்டிருந்தாலும் கூட்டத்தை ஏன் கூட்டினார்கள் என்று சம்பந்தன் மற்றொருவரிடம் வினவினார் என்றும் கேள்வி. நீங்கள்தானே ஐயா கூட்டச் சொன்னனீர்களாம் என்றதற்கு, கூட்டம் பற்றிய அழைப்புத் தனக்குக் கிடைத்த போதுதான் கூட்டம் கூட்டப்படுவது தொடர்பில் தனக்குத் தெரியும் என்றாராம்.

அந்தக்கோபமோஎன்னவோதெரியாது கூட்டம் தொடங்கியதும் சுமார் முக்கால் மணி நேரம் பெருந் தலைவரே அரசியல் வகுப்பு ஒன்றை எடுத்துத் தள்ளிவிட்டார். 1948இல் தொடங்கி, தந்தை செல்வா ஏன் கட்சியைத் தொடங்கினார் என்று விளக்கி, டல்லி-செல்வாஒப்பந்தம், பண்டா-செல்வா ஒப்பந்தம் என்று, இன்றைக்கு அரசியல் தீர்வுக்காக நடக்கும் பேச்சு வரைக்கும் ஒரு நீண்ட பிரசங்கம் அது.

கடைசியில் அந்த உரையை ஏன் ஆற்றினார் என்று அவருக்கும் தெரியாது, கேட்டுக்கொண்டிருந்த மற்றவர்களுக்கும் தெரியாது. அவருக்குப் பின்னர் உரையாற்றிய தலைவர் மாவையோ, கூட்டமைப்பில் இருந்து ரெலோ, புளொட் கட்சிகளைப் பிரித்துவிட்டது

☞2

# படுகொலைகளும் பெருங் குற்றங்களும் அதிகரித்துள்ளதை ஏற்றார் அமைச்சர்

## கட்டுப்படுத்த பொலிஸாரிடம் திட்டம் உண்டாம்



இலங்கையின்பல்வேறு பகுதிகளில் தற்போது மனிதப் படுகொலைகளும் பாரதூரமான குற்றச்செயல்களும் இடம்பெற்றுவருவதை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இன்றைய நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு, ஆளுங்கட்சி உறுப்பினரான சஞ்சீவ

☞2

# கப்பல் விபத்துக்களின் பாதிப்பை ஆராயவதற்கு நாடாளுமன்ற குழு

## நேற்று உறுப்பினர் விவரம் அறிவித்தார் சபாநாயகர்

இலங்கை கடற் பரப்பில் நிகழ்ந்த நியூ டயமன்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துகள் தொடர்பாக ஆராய்ந்து தேவையான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்கான நாடாளுமன்ற விசேட குழுவில்' பணியாற்றுவதற்காக ரமேஷ் பதிரண தலைமையிலான குழுவுக்கான உறுப்பினர்களையும் சபாநாயகர் மஹிந்தயாப்பாஅபேவர்தன நேற்றுச்சபையில்அறிவித்தார்.

இதற்கு அமைய இந்த விசேடகுழுவின் உறுப்பினர்களாக கலாநிதி சுரேன் ராகவன், திருமதி டயனா கமகே, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், சட்டத்தரணி ரஊப் ஹகீம், கௌரவ விஜித ஹேரத், கலாநிதி சரத் வீரசேக்கர, நிரோன்பெரேரா, அஜித்மான்னப்பெரும, நிமல் லான்சா, கௌரவ துார இந்துனில் அமரசேன, டாக்டர் கவிந்த ஹேரான் ஜயவர்தன, அகில எல்லாவல, நாலக பண்டார கோட்டேகொட, சட்டத்தரணி மதுர விதானகே ஆகியோர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர் என்று சபாநாயகரின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 111 இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 நவம்பர் 21 நாடாளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட

☞2

# கஜேந்திரகுமாருக்கு எதிராக நடவடிக்கை சபாநாயகரிடம் சிங்கள ராவய வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 07

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின்தலைவரும் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார்பொன்னம்பலத்திற்குஎதிராகநடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தி சிங்கள ராவய அமைப்பினால் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கடிதம் ஒன்று கையளிக்கப் பட்டுள்ளது.

நாடாளுமன்ற கட்டடத் தொகுதிக்கு நேற்று வந்திருந்த அக்மீமன தயாரட்ன தேரர் தலைமையிலான சிங்கள ராவய அமைப்பினர், சபாநாயகரை சந்திக்க முயன்றபோதும்அதற்குஅனுமதி வழங்கப்படவில்லை.

சபாநாயகருக்குப் பதிலாக நாடாளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ஸஅபேரத்னஅவர்களிடமிருந்து கடிதத்தை பெற்றுக் கொண்டார். அதனை தொடர்ந்து கடிதம் சபாநாயகரிடம் கையளிக்கப் பட்டுள்ளது.

அக்கடிதத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறப்புரிமை, அதிகாரத்தை பயன்படுத்தி குழப்பங்களை விளைவிக்கும் வகையில் செயற்பட்டுள்ளார். ஆகவே அவருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

# டயானவின் எம்.பி. பதவி குறித்த வழக்குத் தீர்ப்பு ஒத்திவைப்பு

இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பை ஜூலை 25 வரை ஒத்திவைத்துள்ளது மேன்முறையீட்டுநீதிமன்றம்.

இராஜாங்க அமைச்சர் டயனா கமகே பிரித்தானிய பிரஜை என்பதால் இந்த நாட்டின் நாடாளுமன்றத்தினைப் பிரதிநிதித்துப்படுத்துவதற்கு அவர் தகுதித் யற்றவர் எனத் தீர்ப்பளிக்குமாறு கோரி சமூக ஆர்வலர்ஓசலஹேரத்தாக்கல் செய்த மனு மீது நேற்றுத் தீர்ப்பு வழங்கப்படுவதாக இருந்தது.

மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் தலைவர் நீதியரசர் நிங்க பந்துல கருணாரத்ன மற்றும் நீதியரசர் ஏ.மரிக்கார் ஆகியோர் தீர்ப்பு ஒத்திவைக்கப்படுவதாக இன்றையதினம் அறிவித்தனர்.

இராஜாங்க அமைச்சருக்குரிய இராஜதந்திர கடவுச்சீட்டைடயானாவுக்குவழங்குவது குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்துக்கு எதிரானது எனவும் அவர் பிரித்தானிய குடியுரிமையைக் கொண்டிருப்பவர் என்பதால் வெளிநாட்டவருக்கு எமது இராஜதந்திர அந்தஸ்து வழங்கப்படுவது சட்டரீதியானது அல்ல என்றும் மனுதாரர் குற்றஞ்சாட்டப்பட்டியிருந்தார்.

# மட்டக்களப்பில் இராணுவம் ஆக்கிரமித்திருந்த காணிகள் 32 வருடங்களின் பின்னர் விடுவிப்பு



மட்டக்களப்பு மாவட்டம், கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயல கப் பிரிவுக்குட்பட்ட முறக்கொட்டாஞ்சேனையில் இராணுவ முகாம் அமைந்திருந்த 8.6 ஏக்கர் காணிகள் நேற்று விடுவிக்கப்பட்டன.

முறக்கொட்டாஞ்சேனை பிரதான வீதியை அண்மித்த பொதுமக்களின் காணிகள், பாடசாலைகாணி, பாடசாலை மைதானக் காணி உள்ளிட்ட 8.6 ஏக்கர் காணிகள் கடந்த 32 வருடங்களாக இராணுவத்தினரால்கையகப்படுத்தப் பட்டிருந்தன.

களுவங்கேணி - முறக்கொட்டாஞ்சேனை - திருமலை வீதியுடன் இணைக்கும் பாதையும் கடந்த 32 வருடங்களாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தமையால்

☞2

# ஜனாதிபதியாக எனக்கு என்ன தகுதி இல்லை? இப்படிக் கேள்வி கேட்கிறார் சம்பிக்க ரணவக்க



நாட்டின் ஜனாதிபதியாகுவதற்கான தகுதிகள் தனக்கு இருப்பதாக ஐக்கிய குடியரசு கட்சியின் தலைவர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சிங்களத் தொலைக் காட்சியில் நடைபெற்ற நேர் காணலின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024ஆம் ஆண்டு பிற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் நடக்குமா, அதற்கு முன்னர் நடக்குமா, ஜனாதிபதி அரசமைப்புச் சட்டத்தை மாற்றி அதனைச் செய்வாரா என்பது எமக்குத் தெரியாது.

ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் நாங்கள் அதற்கு தயார். அதேபோன்று பொதுத்தேர்தலுக்கும் தயாராகவே இருக்கின்றோம்.

ஜனாதிபதியாக பதவிக்கு வருவது உங்களது எதிர்பார்ப்பா என அனைவரும் என்னிடம் கேட்கின்றனர். ஜனாதிபதியாக பதவிக்கு வருவதில் என்னிடம் இல்லாத தகுதிகள் என்ன என்பதுதான் எனது கேள்வியாக உள்ளது - என்றார் அவர்.

# காணி விடுவிப்பு குறித்து ஆராய புதிதாக ஒரு குழு நியமிக்க முடிவு

யாழ். மாவட்டத்தில்படையினர் வசம் இருக்கும் காணிகளை விடுவிப்பது குறித்து ஆராய்ந்து அறிக்கையிட புதிதாக ஒரு குழுவை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில்படையினர் வசமிருக்கும் காணிகளை விடுவிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக் கொழும்பில் இடம்பெற்றது. அதில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. மீன்பிடித் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முன் முயற்சியில் இந்தக் கூட்டம் நடத்தப்பட்டது. ஜனாதிபதியின் செயற்குழுப பிரதாணி சாகல ரத்நாயக்கா அதற்குத் தலைமை தாங்கினார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில்,காணிகளைவிடுவிப்பது தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளக்கூடிய குழு ஒன்றினை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு தரப்பினரையும்பொலிஸாரையும் உள்ளடக்கிய இந்தக் குழு குறுகிய காலப் பகுதிக்குள், அதிகபட்சமாக விடுவிக்கப்படக்கூடிய காணிகளை அடையாளப் படுத்தவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று, வலிவடக்கு பிரதேசத்தில் 2013 காலப் பகுதியில் அரசுடைமையாக்குவது தொடர்பாக வர்த்தமானி வெளியிடப்பட்ட சுமார் 6,000 ஏக்கர் காணிகளில் சுமார் 3,000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டிருப்பதால் குறித்தவர்த்தமானியை மீளப் பெறுவதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

மேலும், காணிவிடுவிப்பு தொடர்பான தெளிவூட்டல்களை மக்களுக்கு வழங்கி, மக்களின் ஒத்துழைப்புடன் காணிகளை விடுவிப்பதற்கு தேவையான காணி அளவீடுகளை மேற்கொள்வதற்கும், இன்னும் நலன்புரிமுகாம்களில் தங்கியிருப்பவர்களுக்குவீடுகளைஅமைத்துக் கொடுத்து மீள்குடியேற்றுவதற்கும் இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், முப்படைகளின் தளபதிகள் உட்பட சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.



# அயலுறவுத்துறை அமைச்சரை சந்தித்தார் கிழக்கு ஆளுநர்

(ஹஸ்பர்)

அயலுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரியைச் சந்தித்துப்பேசியுள்ளார்கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான். இந்தக் கலந்துரையாடல் நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

சுற்றுலா, மீன்வளத் துறை, கனிமமணல் மற்றும் விவசாயம் போன்ற பல்வேறு துறைகளில் வெற்றிகரமாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் நாடுகளின்

☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வரலாற்றுத் தவறு என்ற வியாக்கியானத்தை பிய்த்து உதறினார். அப்படி கட்சிகள் தனித் தனியாகப் பிரிந்து நிற்பதைப் பலர் விரும்பவில்லை என்றார் அவர். மீண்டும் எல்லாக் கட்சிகளும் இணைந்து செயலாற்ற வேண்டும் என்பதே பலரதும் விருப்பம் என்றும் மாவையர் வலியுறுத்தினார்.

மாவையரின் ஒட்டு மொத்த உரையும் மீண்டும் கூட்டமைப்பாக மூன்று கட்சிகளும் சேர்ந்தே இயங்க வேண்டும் என்பதுதாகத்தான் இருந்தது. அதற்காகத்தான் கூட்டத்தையே கூட்டியிருப்பார் போலும். அந்தப் பக்கம் ஜன நாயகக் கூட்டணிக்குள் ஒற்றுமை, கலகலத்துப் போய்க் கிடப்பதால், அவர்களின் யாப்பு உருவாக்கம் முற்றுப்பெறாமல் இழுத்தடிக்கப்படுவதால், கடைசியில் ரெலோவின் சீனித் தொழிற்சாலை நடவடிக்கையில் சீனாக்காரனை, தாய்லாந்தில் பதிவு செய்த பிரிட்டிஷ் முதலீட்டாளர்கள் என்று தங்களையே ஏமாற்றப் பார்க்கிறார்கள் என்று இந்தியா கொதித்துப் போயிருப்பதால் ஏற்பட்டுள்ள குழப்பத்தால், அந்தக் கட்சிகளையும் மீண்டும் சேர்த்துக்கொண்டு கூட்டமைப்பாகப் 'படம்' காட்டலாம் என்று நினைத்திருப்பார் போலும்.

ஆனால், கூட்டத்தில் அவரது கருத்தை ஆமோதித்துப் பேச, மீண்டும் கூட்டமைப்பு என்ற கருத்தை வரவேற்க ஒரு ஈ, காக்காய், குருவிகூட இருக்கவில்லை. போதாததற்கு மாவையர் தனது சுயநலம் கருதி இந்தமாதிரியான விடயங்களைக் கொண்டு வரக்கூடாது என்ற சாரப்பட கட்சியின் முன்னாள் செயலாளர் கி.துரைராஜசிங்கம் வெளுத்து வாங்கிவிட்டார். தனியே ஒரு நோக்கத்தையோ, விடயத்தையோ மட்டும் நோக்கமாகக் கொண்டு மாவையர் செயற்படக்கூடாது என்று நேரடியாகவே - நெற்றிப்பொட்டுக்கு நேரேயே - வெளுத்து வாங்கிவிட்டார்.

மாவையர் சொன்னது திரிபுபடுத்தப்பட்ட கருத்து என்று விமர்சித்தார். ரெலோவையும் புளொட்டையும் கூட்டமைப்பை விட்டு வெளியேறும்படி தமிழ் அரசுக்கட்சி ஒருபோதும் சொல்லவில்லை. அப்படியிருக்க அவற்றை பிரித்துவிட்டோம் என்று மாவையர் எப்படிச் சொல்லமுடியும் என்று ஒரு பிடி பிடித்தார். கூட்டமைப்பைவிட்டு வெளியேறும் முடிவை ரெலோவும் புளொட்டும் தாங்களாகவே எடுத்தன, அதை அந்தக் கட்சிகள் செய்வதற்கு நீண்ட காலத்திற்கு முன்னரே தமிழ் அரசுக் கட்சி அதைச் செய்திருக்கவேண்டும், அவர்களை வெளியேற்றியிருக்க வேண்டும் என்று போட்டுத் தாக்கினார்.

எப்படியிருந்தாலும் இனி அந்த இரு கட்சிகளையும் ஒருபோதும் தமிழ் அரசுக் கட்சியுடன் கூட்டுச் சேசர்த்துக்கொள்ளக்கூடாது என்றும் ஆணித்தரமாகக் கூறியிருக்கிறார். அந்த இரு கட்சிகளும் இன்றித் தமிழ் அரசுக் கட்சி தனித்து இயங்குவதையே மக் கள் விரும்புகிறார்கள் என்று தான் அறிந்தார் என்றும் ஒரு குண்டையும் தூக்கிப் போட்டுவிட்டார் துரைராஜசிங்கம். மற்றைய எல்லோரும் அதையும் கேட்டுக் கொண்டிருந்தார்கள். யாரும் செயலாளரையும் ஆதரித்துப் பேசவில்லை. இரண்டு மணி நேரமாகிவிட்டதைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரனும் சாணக்கியனும் தங்களுக்கு நாடாளுமன்றத்தில் உரையாற்றும் தேவை இருக்கின்றது என்று தெரிவித்து அங்கிருந்து புறப்பட ஆயத்தமாகியதை அடுத்து கூட்டம் முடிவுக்கு வந்தது.

கடைசியில் ஏன் கூடிக் கலைந்தார்கள் என்று தெரியாமலேயே அரசறிவியல் பாடம் படித்துவிட்டு - வகுப்புக்குச் சென்றுவிட்டு - எல்லோரும் புறப்பட்டார்கள். "ஒரு ஆணியும் புடுங்கவில்லை'' என்பதே அவர்களில் ஒருவரின் கூட்டம் பற்றிய கருத்து.

கட்சியின் அடுத்த பொதுக் கூட்டத்தைக் கூட்டுவது பற்றியோ அதன் ஏற்பாடுகள் பற்றியோ இந்தக் கூட்டத்தில் மூச்சுக்கூடக் காட்டப்படவில்லை.

- இடிமின்னல் -

## பெற்றோருக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

எவ்வாறாயினும், ஸ்மார்ட் தொலைபேசிகளை வழங்கும்போதும், மின்னஞ்சலைத் தொடங்கும்போதும் பெற்றோர்களின் தரவை வழங்குவதன் மூலம், குழந்தைகள் எந்தவொரு இணையதளத்தையும் அணுகுவதற்கான வாய்ப்பைப் பெறு வார்கள் என்று அவர்கள் சுட்டிக்காட்டினர்.

அப்படி இல்லாமல், குழந்தைகளின் சரியான வயது உள்ளிட்ட தகவல்களை வழங்கினால் தேவையற்ற வீடியோக்கள் மற்றும் இணையத்தளங்களைப் பார்ப்பதற்கு பிள்ளைகளுக்கான அணுகல் தானாகவே கட்டுப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தனர்.

தேசிய நல்லிணக்கம் மற்றும் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் செயலாற்றுகை தொடர்பில் ஆராய்வதற்காக நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ டிலான் பெரேரா தலைமையில் அண்மையில் கூடியபோதே பொலிஸ் அதிகாரிகள் இதனைத் தெரிவித்தனர்.

தொலைபேசியைப் பயன்படுத்தும் போது இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவினால் குறித்த கையடக்கத்தொலைபேசி அங்கீகரிக்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க வேண்டியது அவசியம்.

எந்தவொரு குற்றச்செயலுக்கும் கையடக்கத்தொலைபேசிகள் பயன்படுத்தப்பட்டால், அதை விரைவாக சமாளிக்கும் திறன் இந்த கையடக்கத் தொலைபேசிகளுக்கு உள்ளது.

தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவில் பதிவுசெய்யப் பட்ட கையடக்கத்தொலைபேசிகளில் சிம் அட்டைகளை இடும்போது, அது தொடர்பான தகவல்களை ஆணைக்குழு பெறுகிறது.

எனவே, கையடக்கத் தொலை பேசிகளைக் கொள்வனவு செய்யும்போது, அவை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவில் பதிவுசெய்யப்பட்டவையா என்பதை உறுதிசெய்து கொள்ளுமாறும் பொலிஸ் அதிகாரிகள் குழு முன்னிலையில் தெரிவித்தனர்.

அத்துடன், தேசிய நல்லிணக்கம் மற்றும் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகம் தொடர்பில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான இசுரு தொடங்கொட, மாயாதுன்ன சிந்தக அமல், ராஜிகா விக்கிரமசிங்ஹ மற்றும் கெவிந்து குமாரதுங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

## அரசியல்வாதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஆட்சி அதிகாரத்துக்கு வரும்போது 80 - 20 சதவீதமாக இருந்த மறைமுக மற்றும் நேரடி வரி விகிதம் தற்போது 70 - 30 சதவீதம் என்ற நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த வருட இறுதிக்குள் அந்த விகிதாசாரம் 60 - 40 சதவீதம் என்ற நிலைக்குகொண்டுவரப்படும். அதனையே இலக்காகக் கொண்டு இந்த ஆட்சி செயற்படுகின்றது - என்றார்.

## கப்பல்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக நியமிக்கப்பட்ட அந்தந்த துறைசார் மேற்பார்வைக் குழுக்களில் பணியாற்றுவதற்காக பின்வரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தெரிவுக் குழுவினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் ஏன்று சபாநாயகர் அறிவித்தார்.

## மட்டக்களப்பில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டு மாற்றுப் பாதைகளைப் பயன்படுத்தி வந்த நிலையில் குறித்த பாதையும் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர், கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் ஆகியோர் முன்னிலையில் கிழக்கு மாகாண இராணுவத் தளபதி காணி விடுவிப்புப் பத்திரத்தை வழங்கி வைத்தார். அதன்பின்னர் தனியார் காணிகள் காணி உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

இராமகிருஷ்ண மின் பாடசாலை காணி தொடர்ந்தும் இராணுவத்தின் வசமே உள்ளது.

நேற்றைய காணி விடுவிப்பு நிகழ்வில் கிழக்கு மாகாண இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜிப கெட்டியாராட்சி, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் கலாமதி பத்மராஜா, மாவட்ட (காணி) உதவி அரச அதிபர் நவரூபரஞ்சினி முகுந்தன் மற்றும் கோறளைபற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாவு, பிரிகேடியர் இரந்த ரத்நாயக்க, முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் அதிகாரி, மாவட்ட பொலிஸ் பொறுப்பாதிகாரி மற்றும் காணி உரிமையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (02)

## படுகொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எதிரிமான்னவின் கேள்விக்குப் பதிலளித்தபோதே இதனை ஏற்றுக்கொண்டார்.

அவர் அளித்த பதிலில் மனித படுகொலைகள், பாதூரமான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த பொலிஸாரிடம் முறையான வேலைத்திட்டங்கள் காணப்படுகின்றன. அவை முன்னெடுக்கப்பட்ட வருகின்றன. எனினும் அண்மைக்கால குற்றச் செயல்களின் பின்னணியில் ஆபத்தான துப்பாக்கிப் பயன்பாடுகள் உள்ளன - என்றார்.

சஞ்சீவ எதிரிமான்ன குறுக்கிட்டு, "நாட்டில் போர் நடந்தபோது அநாவசியமான துப்பாக்கிப் பயன்பாடுகள் இருந்தன. ஆனால், இப்போதும் இது தொடர்வது ஏன்? சட்டவிரோதமான முறையில் ஏ.கே.47 துப்பாக்கியைக்கூடப் பயன்படுத்துகிறார்கள். இது தொடர்பில் விசாரணைகள் ஏதுவும் முன்னெடுக்கப்பட்டுள்ள னவா?" என்று கேள்வி எழுப் பினார்.

"போர் நிறைவடைந்தப் பின்னர் தென்மாகாணத்துக்குக் கொண்டுவரப்பட்ட துப்பாக்கிகளே இலங்கையில் பல இடங்களிலும் பரவி உள்ளன. இதற்கு மேலதிகமாக போதைப்பொருள்களை நாட்டுக்குள் கடத்தும்போது துப்பாக்கிகளையும் கடல்வழியாக நாட்டுக்குள் கொண்டு வருகிறார்கள்.

பண்டாரகமவில் 192 கிலோ கிராம் போதைப்பொருளுடன் 10 பிஸ்டல்களும் கொண்டுவரப்பட்டிருந்தன. கடந்த 3 வருடங்களில் மாத் திரம் விசேட பொலிஸ் அதிரடிப்படையினரால் ஆயிரத்து 163 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதில் ரி - 56 மற்றும் ரி - 81 ரக துப்பாக்கிகளும் பிஸ்ரல்களும் உள்ளடங்கும்" என்று பதிலளித்தார் அமைச்சர் டிரான்.

# முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலய பொங்கல் நிகழ்வு சிறப்பாக நடந்தது!



(சண்முகம் தவசீலன்)

முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலய பொங்கல் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை காலை முதல் திங்கட்கிழமை அதிகாலை வரை சிறப்பாக நடைபெற்றது.

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வை முன்னிட்டு கடந்த 29.05.23 அன்று முல்லைத்தீவு பெருங்கடலில் எடுக்கப்பட்ட கடல்தீர்த்தம் முள்ளியவளை காட்டு விநாயகர் ஆலயத்திற்கு கொண்டுவரப்பட்டு கடல் நீரில் விளக்கியும் அற்புதம் அம்மன் சந்நிதானத்தில் இடம்பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலய விநாயகருக்கான சிறப்பான பூசைகள் நடைபெற்று தொடர்ந்து அம்மன் சந்நிதானத்தில் அம்மனுக்கான பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ந்து ஏட்டில் எழுதப்பட்ட கண்ணகி அம்மனின் வரலாறு படிக்கப்பட்டது .அதனை தொடர்ந்து நண்பகல் பூசை இடம்பெற்றது.

இதனை தொடந்து இரவு மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு வளர்ந்து நேந்து பொங்கல் பொங்கி படைக்கப்பட்டு விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. ஆலய பொங்கல் நிகழ்வின் போது பெருமளவான பக்த்தர்கள் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்ய காவடி பாற்செம்பு எடுத்த அதேவேளை இரவு பொங்கல் சிறப்பாக இடம்பெற்றது. (05)

## அயலுறவுத் ....



(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நிபுணத்துவத்தை கிழக்கு மாகாணத்திற்குப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் இருவரும் ஆராய்ந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இதற்கு வேண்டிய உதவிகளை அய லுறவுத்துறை அமைச்சர் செய்து தரவேண்டும் என்று அவரிடம் கிழக்கு மகாகாண ஆளுநர் கோரியிருக்கிறார்.

ஆளுநரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று அதற்குச் சாதகமான பதிலை அயலுறவுத் துறை அமைச்சர் அளித்துள்ளார்.




# கல்முனையில் களைகட்டிய உலக சுற்றாடல்தின நிகழ்வு





கல்முனை, ஜூன் 07

(வி.ரி. சகாதேவராஜா)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் பல நிகழ்வுகள் வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் திங்கட்கிழமை இடம்பெற்றன.

கடந்த திங்கட்கிழமை உலக சுற்றாடல் தினம் பரவலாக அனுஷ்டிக்கப்பட்டது.

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் எஸ். உதயராஜ் , பிராந்திய சுற்றாடல் அதிகாரி திருமதி செவ்வேள் குமரன், வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் ஜெ.மதன், கல்முனை சென்றல் பைனான்ஸ் முகாமையாளர் ஜெ.அனோஜ், வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வின் போது கடந்த மாதம் பிறந்தநாளைக் கொண்டாடிய வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்களை மரநடுகையை ஊக்குவிக்கும் முகமாக பழ மரங்கள் வழங்கி அவர்களால் நடப்பட்டன.

இந்நிகழ்வுக்கான 50 பழமரக்கன்றுகளை சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி பதக்க கல்முனை தமிழ் கோட்ட மாணவர்களினாலும், 25 பழமரக்கன்றுகள் கல்முனை சென்றல் பைனான்ஸ் நிறுவனத்தினராலும் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வின் போது வைத்தியசாலை ஊழியர்களின் குழந்தைகளால் சுற்றாடல் பாதுகாப்பு, மரங்களை பாதுகாப்போம் பாதுகாப்பான இயற்கை உணவுகள் மற்றும் இயற்கை கிருமிநாசினிகள் என்னும் தொனிப்பொருள்களில் சுற்றாடல் காட்சிப்படுத்தல் நிகழ்வுகளும் இடம்பெற்றன. (05)

# சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் தேசிய கல்வியியற் கல்லூரிமாணவர்கள் ஊர்வலம்





சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களால் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதுடன், மரம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது.

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள தேசிய கல்வியியற் கல்லூரியில் திங்கட்கிழமை மதியம் சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு மரநடுகை இடம்பெற்றதுடன், அதனைத் தொடாந்து சுற்று சூழல் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு ஊர்வலமும் இடம்பெற்றது.

தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து பூந்தோட்டம் சந்தி வரை ஊர்வலமாகச் சென்ற ஆசிரிய மாணவர்கள் சூழல் பாதுகாப்பு தொடர்பான படங்களையும், சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்ததுடன், பூந்தோட்டம் சந்தியை அடைந்ததும், பொதுமக்களுக்கு மரநடுகைக்கான மரங்களை விநியோகித்ததுடன், மீண்டும் ஊர்வலமாக தேசிய கல்வியியற் கல்லூரியை வந்தடைந்தனர்.

கல்லூரிவாயிலில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பான குறியீட்டு நாடகம் ஒன்று ஆசிரிய மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது. குறித்த நிகழ்வில் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (05 - 100)

# சாய்ந்தமருது வொலிவேரியன் பிரதேசத்தில் போதைப் பொருளுடன் ஒருவர் கைதானார்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வொலிவேரியன் கிராமத்தில் பலநாள்களாகத் தேடப்பட்டு வந்த போதைப்பொருள் விற்பனையாளர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சாய்ந்தமருது பொலிஸாருக்கு பிரதேச மக்களால் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து வொலிவேரியன் கிராமத்தில் வசிக்கும் 37 வயதுடையவரும் நான்கு பிள்ளைகளின் தந்தையுமான சந்தேக நபரே சாய்ந்தமருது பொலிஸ் நிலைய போதை ஒழிப்புப் பிரிவால் சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ.எச்.எல்.எம். புத்திக வழிகாட்டலிலும் சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எம்.எம். சம்சுதீன் அனுசரணையுடன் போதைஒழிப்பு குற்றத் தடுப்புப் பிரிவு உதவி பொலிஸ் உத்தியோகத்தர் ஏ.எல்.எம். ரவூப் தலைமையிலான குழுவால் மேற்படி சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர்.

மேற்படி சந்தேகநபரைத் பொலிஸார் தேடி வந்த நிலையில், சந்தேக நபரைப் போதைப்பொருளுடன் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக சாய்ந்தமருது பொலிஸார் மேலதிக விசாரணை மேற்கொண்டுள்ளனர். (05)

# இளம் தம்பதி வெட்டிக்கொலை இரத்த வெள்ளத்தில் சடலங்கள்

இளம் தம்பதியினர் வெட்டுக்காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் வசித்த வீட்டின் அறையொன்றிலிருந்து சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குருநாகல் - நாரம்மலை பிரதேசத்தில் பதிவாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

29 வயதுடைய வசந்த, 27 வயதுடைய ரோஹிணி ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

குருநாகல் - மல்லவபிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த இருவரும் இரண்டு வருடங்களுக்கு முன்னர் திருமணமாகி நாரம்மலை பிரதேசத்திலுள்ள வாடகை வீடொன்றில் வசித்து வந்துள்ளனர்.

திங்கட்கிழமை பிற்பகல் அந்த வீட்டிலிருந்து அவர்கள் கழுத்திலும் உடலிலும் பாரிய வெட்டுக்காயங்களுடன் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

சடலங்கள் மீட்கப்பட்ட வீட்டின் அறை இரத்த வெள்ளத்தில் காணப்பட்டது.

இருவரும் வன்முறைக் குழுவொன்றால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

நீதிவானின் உத்தரவுக்கமைய சடலங்களை உடற்கூற்றுப் பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், கொலையாளிகளைத் தேடும் நடவடிக்கையில் களமிறங்கியுள்ளனர். (02)




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆயுதங்களைக் களைவது அவசியம்

**இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தற்போது மனிதப் படுகொலைகளும் பாரதூரமான குற்றச்செயல்களும் இடம்பெற்றுவருவதை நாடாளுமன்றில் பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்..**

**ஆளுங்கட்சிஉறுப்பினரானசஞ்சீவஎதிரிமான்னவின் கேள்விக்கு அவர் அளித்த பதிலில் "மனிதப் படுகொலைகள், பாதூரமான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தக் காவல்துறையினரிடம் முறையான வேலைத்திட்டங்கள் காணப்படுகின்றன. அவை முன்னெடுக்கப்பட்ட வருகின்றன. எனினும் அண்மைக்கால குற்றச் செயல்களின் பின்னணியில் ஆபத்தான துப்பாக்கிப் பயன்பாடுகள் உள்ளன" – என்றார்.**

**சஞ்சீவ எதிரிமான்ன குறுக்கிட்டு, "நாட்டில் போர் நடந்தபோது அநாவசியமான துப்பாக்கிப் பயன்பாடுகள் இருந்தன. ஆனால், இப்போதும் இது தொடர்வது ஏன்? சட்டவிரோதமான முறையில் ஏ.கே.47 துப்பாக்கியைக் கூடப் பயன்படுத்துகிறார்கள். இது தொடர்பில் விசாரணைகள் ஏதுவும் முன்னெடுக்கப்பட்டுள்ளனவா?" என்று கேட்டதற்கு,**

**"போர் நிறைவடைந்தப் பின்னர் தெற்குக்குக் கொண்டுவரப்பட்ட துப்பாக்கிகளே இலங்கையில் பல இடங்களிலும் பரவி உள்ளன. இதற்கு மேலதிகமாக போதைப்பொருள்களை நாட்டுக்குள் கடத்தும்போது துப்பாக்கிகளையும் கடல்வழியாக நாட்டுக்குள் கொண்டு வருகிறார்கள். பண்டாரகமவில் 192 கிலோ கிராம் போதைப்பொருளுடன் 10 கைத்துப்பாக்கிகளும் கொண்டுவரப்பட்டிருந்தன. கடந்த 3 வருடங்களில் மாத்திரம் காவல்துறை மற்றும் அதிரடிப்படையினரால் ஆயிரத்து 163 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதில் ரி – 56 மற்றும் ரி – 81 ரக துப்பாக்கிகளும் பிஸ்ரல்களும் உள்ளடங்கும்" என்றும் பதிலளித்துள்ளார் அமைச்சர் டிரான்.**

**இலங்கையில் தற்போது போர் இல்லை. கடந்த 14 ஆண்டுகளாகப் போர் இல்லை. ஆனால் துப்பாக்கிகள் அரச படைகளுக்கு வெளியேயும் பயன்பாட்டில் உள்ளன என்பது எவ்வளவு ஆபத்தானது. அவ்வாறு பயன்பாட்டில் உள்ள துப்பாக்கிகளின் மூலம் இந்த ஆண்டின் முதல் 146 நாட்களில் மட்டும் 23 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்கிறது காவல்துறைப் புள்ளிவிவரங்கள். மேலும் 6 பேர் காயமடைந்துள்ளனர்.**

**இந்தக் கொலைகளுக்குக் காரணமாக துப்பாக்கிகள் போரின் பின்னர் வடக்கில் இருந்து தெற்குக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் கூறுவாரானால், அது எப்படி வந்தது என்பதையும் அவர் விசாரித்து உரியவர்களைத் தண்டிக்கவேண்டும். வடக்கில் இறுதிப் போர் நடந்த காலங்களில் அந்தப் போர் நடந்த பகுதிகள் அனைத்தும் பல காலமாகப் படையினரின் முழுக் கட்டுப்பாட்டில் மட்டுமே இருந்தன. எனவே அங்கிருந்து துப்பாக்கிகள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் சென்றிருக்குமானால் அது படையினரின் உதவியின்றி நடந்திருக்க வாய்ப்பில்லை. எனவே அது குறித்து தீவிரமாக விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

**அத்தோடு சட்டத்துக்குப் புறம்பான ஆயுதங்களைக் கட்டுப்படுத்துவதற்கு காவல்துறையினரிடம் திட்டம் இருந்திருந்தால் போர் முடிந்து 14 ஆண்டுகளின் பின்னரும் இப்படி அந்த ஆயுதங்கள் பயன்பாட்டில் இருப்பதற்கு அனுமதித்திருக்கமாட்டார்கள். எனவே வெறும் பதிலாக மட்டும் இதனைச் சொல்லாமல் சட்டத்திற்குப் புறம்பான ஆயுதங்களைக் களைவதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடன் எடுப்பது அவசியம்.**

## மக்கள் நலன்னுக்காகப் போராடுவோரை புலனாய்வாளர் மூலம் நசுக்கவேண்டாம்

### அடக்குமுறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பு வேண்டுகோள்

மக்களினுடைய நல்வாழ்விற்காகப் போராடும் அரசியல் கட்சிகளையும் மக்கள் அமைப்பினையும் புலனாய்வு பிரிவினை கொண்டு நசுக்கவேண்டாம் என்று அடக்குமுறைக்கு எதிரான ஜனநாயக அமைப்பின் தலைவர் க.மு.தம்பிராசா தெரிவித்தார்

யாழ்ப்பாணத்தில் இன்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடுகின்ற அமைப்புகளை அவர்களின் ஜனநாயக உரிமைகளை மறுத்து அவர்கள் மீது பொலிஸார் தொடரும் அடக்குமுறை நிறுத்தப்படவேண்டும்.

வடகிழக்கு மாகாணங்களுக்கு நியமிக்கப்படுகின்ற பொலிசாரின் திட்டமிட்ட அத்துமீறல்களை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும். மிக அண்மையில் மருதங்கேணியில் இடம்பெற்ற சம்பவத்தில் அங்கிருந்த ஒரு கட்சியின் மகளிர் அணித் தலைவியும் அதேபோல் இன்னுமொரு உறுப்பினரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மருதங்கேணி பொலிசாரை கடமை செய்ய விடாமல் தடுத்தார்கள் எனக் கூறி அவர்களை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடமைகளுக்குச் செல்லுகின்ற அனைத்து பொலிசாரும் தங்களுடைய பொலிஸ் உடையை அணிந்துதான் செல்லுகின்றார்கள். ஆகவே இங்கு எதற்காக சிவிலுடையில் செல்லவேண்டும்? இங்கே புலனாய்வாளார்கள் யாரை புலனாய்வு செய்கின்றார்கள்? அரசுக்கு எதிராகச் செயல்படுகின்ற அல்லது தங்களுடைய உரிமைகளுக்காக போராடுகின்ற மக்களை அச்சுறுத்தவே புலனாய்வாளர்கள் வடகிழக்கு மாகாணங்களில் செயற்படுகின்றார்கள்.

கிறீஸ் மனிதன், ஆவா குழு, வாள் வெட்டு கும்பல்கள் என எல்லாவற்றுக்குப் பின்னாலும் அரச புலனாய்வாளர்கள் தான் செயற்படுகின்றார்கள் என்று வடக்கிழக்கு வாழ் தமிழர்களும் சந்தேகிக்கின்றார்கள்.

ஜனநாயக ரீதியாக முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்களை நசுக்குவதற்காக இந்த புலனாய்வாளர்கள் ஏவிவிடப்படுகின்றார்கள். தமிழ் தேசியப் பரப்பில் செயற்படுகின்ற அரசியல் கட்சிகளை அமைப்புகளை புலனாய்வு செய்ய வேண்டிய தேவை அரசுக்கு என்ன வந்தது? - என்றார். (03)

## நிந்தவூரில் மாட்டிறைச்சிக்கு தடையில்லை

(அகீல்)

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் விற்பனை செய்யப்படும் மாட்டிறைச்சியினை உண்பதற்கு எவ்வித தடையும் இல்லை எனவும் பொது மக்கள் இறைச்சி உண்பதில் பீதி அடையத் தேவையில்லை எனவும் நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி கே.எல்.எம்.றயீஸ் தெரிவித்துள்ளார்.

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் வேறு சில மாவட்டங்களில் மாடுகளிற்கு வைரஸ் நோய் பரவி வரும் தகவல் வெளியானதையடுத்து நிந்தவூர் பிரதேசத்திலும் மாட்டிறைச்சி விற்பனையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில் பொது மக்கள் பெரும் அச்ச நிலையிலும் உள்ளனர். இந்த விடயம் தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காகவே செய்தியாளர்கள் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிந்தவூர் பிரதேச சபை செயலாளர் திருமதி ரி.பரமேஸ்வரன் மற்றும் நிந்தவூர் அரச கால் நடை வைத்திய அதிகாரி யூ. கதீஸ்வரன் உட்பட மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் மற்றும் பொது மக்களும் கலந்துகொண்டனர்.

சுகாதார வைத்திய அதிகாரி றயீஸ் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் தெரிவித்ததாவது:

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், அரச கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் பிரதேச சபை ஆகிய மூன்று நிறுவனங்களும் இணைந்து மிகுந்த கண்காணிப்புடன் இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படுவதனை உறுதி செய்து வருகின்றன. எனவே, நுகர்வோருக்கு நோய்த்தொற்று அற்ற மாட்டு இறைச்சி கிடைப்பதனை உறுதி செய்யப்படுகின்றது. எமது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இந்த விடயத் தில் மிகவும் அவதானத்துடனும் கண்காணிப்புடனும் செயற்பட்டு வருகின்றனர்.

வெளி மாவட்டங்களில் இருந்து மாடுகளை இங்கு கெண்டுவருவதற்கும் இங்கிருந்து மாடுகளை வெளி மாவட்டங்களிற்கு கொண்டு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் சந்தேகிக்கப்படும் வைரஸ் நோய் பரவலை வெகுவாக கட்டுப்படுத்தலாம். எனவே, நிந்தவூர் பிரதேச பொது மக்கள் மாட்டிறைச்சி நுகர்வது தொடர்பில் எவ்வித பீதியும் அடையத்தேவையில்லை என்பதனை உறுதி செய்கின்றோம் - என்றார்.




## யாழ். இந்து பழைய மாணவர் கிரிக்கெட் வெற்றிவாகை சூடியது அமத்தடா அணி

யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நடந்த மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் அமத்தடா அணி வெற்றிபெற்றது.

பழைய மாணவர் அணிகளுக்கு இடையே நடந்த இந்தப் போட்டி கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.

இறுதி ஆட்டத்தில் அமத்தடா அணி வெற்றிவாகைசூடிவெற்றிக்கிண்ணத்தை தமதாக்கி கொண்டதுடன், ரூபா 20000 பணப்பரிசினையும் பொறுக்கொண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அமத்தடா மற்றும் புளூ லெஜன்ட் அணிகள் மோதின.

குறித்த துடுப்பாட்டப் போட்டிக்கு பிரதம விருந்தினராக சண் தயாளன் கலந்துகொண்டதோடு, வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணங்களையும் பணப் பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

## கிண்ணியா கடற்கரை பூங்காவை அண்மித்து கரையோரத்தைத் தூய்மைப்படுத்தும் நிகழ்வு



(ஹஸ்பர்)

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட கரையோரத்தை தூய்மைப்படுத்தும் நிகழ்வு திங்கட்கிழமை கிண்ணியா கடற்கரை பூங்காவை அண்மித்த கரையோர பகுதியில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் கலந்து சிறப்பித்தார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் ஆகியன இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பல செயற்பாடுகள் ஒரு வாரமாக நடைபெற்ற வண்ணம் இருக்கின்றன. இந்த வருடம் மே மாதம் 30 ஆம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 05 ஆம் திகதி வரையான வாரம் தேசிய சுற்றாடல் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகளின் சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டத்தால் இவ்வருடத்தின் சர்வதேச சுற்றாடல் தின விழாவின் தலைப்பாக 'பிளாஸ்டிக் மூலம் ஏற்படக் கூடிய மாசைத் தடுப்போம்' எனும் தொனிப்பொருளில் இவ்வருடம் சர்வதேச சுற்றாடல் தினம் கொண்டாடப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி, துறைசார் அதிகாரிகள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு உத்தியோகத்தர்கள், கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்கள உத்தியோகத்தர்கள், கிண்ணியா பொலிஸ் உத்தியோகத்தர்கள், கடற்படை உத்தியோகத்தர்கள், இராணுவ படை உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு மாபெரும் மரநடுகை திட்டம் முன்னெடுப்பு







(பாறுக் ஷிஹான்)

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு கடந்த திங்கட்கிழமை இயற்கையின் சுவாசத்தை வளர்ப்பதற்கான 10 ஆயிரம் மரங்களை நடுதல் தொனிப்பொருளில் பல்வேறு நிறுவனங்களில் மர நடுகை திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இன்று அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் அமைந்துள்ள 18 ஆவது விஜயபாகு காலாட் படைப்பிரிவில் மரநடுகையின் ஆரம்ப கட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன் போது கல்முனை இராணுவ முகாமின் இரண்டாவது நிர்வாக கட்டளை அதிகாரி மேஜர் தயானந்த மற்றும் சியபத நிதி நிறுவனத்தின் கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான பிராந்திய முகாமையாளர் முஹம்மட் பிரிம்சாத், அந்த நிறுவனத்தின் கல்முனை கிளை முகாமையாளர் முஹம்மட் பாயிஸ், அதன் ஊழியர்களான ஏ.ஜவாத் ,எம்.ரி.எம்.முஜீப், ஏ.ஆதீஸ் ,வி.திசிதரன், எஸ்.அஜய், என்.பவாகரன், ஏ.ஏ.ஏ றிஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பின்னர் அதன் தொடர்ச்சியாக அருகில் உள்ள கல்முனையில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா நெள தீகாயு கடற்படை முகாமில் இந்தத் திட்டம் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டன. இதன் போது குறித்த முகாமின் கட்டளையிடும் அதிகாரி பி.இ.எம்.டி. தம்மிக கலந்துகொண்டு உத்தியோகபூர்வமாக இந்தத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இதேவேளை, சாய்ந்தமருது கோட்டக்கல்வி அதிகாரி என்.எம்.எம்.மலீக் தலைமையில் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்திலும் மர நடுகை திட்டமானது முன்னெடுக்கப்பட்டது. இதன் போது சாய்ந்தமருது கல்வி கோட்டத்தை சேர்ந்த 09 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு பெறுமதி வாய்ந்த மரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் சியபத நிதி நிறுவனத்தின் கிழக்கு மாகாண பிராந்திய முகாமையாளர் முஹம்மட் பிரிம்சாத் சியபத நிதி நிறுவன கிளை முகாமையாளர் முஹம்மட் பரீஹ், கல்முனை கிளை முகாமையாளர் முஹம்மட் பாயிஸ், அதன் ஊழியர்களான ஏ.ஜவாத், எம்.ரி.எம்.முஜீப், ஏ.ஆதீஸ், வி.திசிதரன், எஸ்.அஜய்,என்.பவாகரன்,ஏ.ஏ.ஏறிஹான் ஆகியோர் கலந்துகொண்டனர். பின்னர் குறித்த பாடசாலை வளாகத்திலும் மரநடுகை முன்னெடுக்கப்பட்டது.

இந்த மாபெரும் மர நடுகை திட்டத்தில் தென்னை, மாமரம், தோடை, மாதுளை ,ஜம்பு, முந்திரிகை, உள்ளிட்ட மரங்கள் உள்வாங்கப்பட்டு நடப்பட்டதுடன் அதிகமான இராணுவத்தினர், கடற்படையினர், அதிபர்கள், ஆசிரியர்கள், ஆர்வத்துடன் பங்கேற்று இருந்தனர்.

எதிர்காலத்தில் சூழலைப் பசுமையாக்கும் திட்டத்தின் கீழ் பொது இடங்கள் கடற்கரைப் பிரதேசங்கள் அரச நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள் மதஸ்தாபனங்கள், வயல்காணிகள் உள்ளிட்ட சகல இடங்களிலும் பொதுமக்களின் பங்களிப்புடன் இந்தத் திட்டம் சியபத நிறுவனத்தால் முன்னெடுக்கப்பட உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது. (05)

# ஏ - 9 வீதியில் விபத்து ஏழு பெயர் படுகாயம்

(சண்முகம் தவசீலன்)

ஏ-9வீதியில்மன்னகுளம் பகுதியில்இடம்பெற்ற விபத்து ஒன்றில் ஏழு பெயர் காயமடைந்துள்ளனர் இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரிய-வருகையில் -

கொழும்பிலிருந்துயாழ்ப்பாணம் நோக்கி சென்ற ஹயஸ் வாகனம் மன்னகுளம் பகுதியில் முன்னால் பயணித்த டிப்பர் வாகனம் மீதுமோதிவிபத்துக்குள்ளானதில் 7 பேர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த விபத்து திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் கனக ராயன் குளத்துக்கும் மாங்குளத்துக்கும் இடையில் 212 ஆவது கிலோமீற்றர் (மன்னகுளம் ) பகுதியில் இடம்பெற்றுள்ளது.

விபத்தையடுத்து டிப்பர் வாகனம் அங்கிருந்து சென்ற நிலையில் பொதுமக் கள் உதவியுடன் ஹயஸ் வாகனத்திலிருந்த 7 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு 1990 அம்புலன்ஸ் மூலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



# டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் சாய்ந்தமருதில் முன்னெடுப்பு!

(நூருல் ஹுதா உமர், யூ.கே.காலிதீன்)

டெங்கு கட்டுப்பாட்டு வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனைமாநகரசபையால் ஒழுங்கு செய்யப்பட்ட டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம் செவ்வாய்க்கிழமை சாய்ந்தமருதில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மியின் ஆலோசனை, வழிகாட்டலில் காலை 7.00 மணிதொடக்கம் மாநகரசபைக்குட்பட்ட சாய்ந்தமருது பிரதேசங்களில் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவான அடையாளம் காணப்பட்ட பல இடங்களில் டெங்கு ஒழிப்பு சிரம தான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

சாய்ந்தமருதுபொலிஸார், மாநகர சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம். இஸ்ஹாக், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைபொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோரின் பங்களிப்புடன் மாநகர திண்மகழிவு முகாமைத்துவ மேற்பார்வையாளர்களின் நேரடி மேற்பார்வையின் கீழ் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த வேலைத் திட்டத்துக்கு பிரதேச சுகாதார வைத்திய பணிமனை, பொலிஸ் உள்ளிட்ட சில அரச திணைக்களங்கள் முழுமையான ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தன. (05)

# பல்லவராஜ மன்னன்சிலை பூநகரியில் திறந்துவைப்பு!



பூநகரி பிரதேச சபையால் பல்லவராஜன் கட்டு சந்தியில் நிர்மாணிக்கப்பட்ட பல்லவராஜ மன்னன் சிலை திறந்து வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை காலை பூநகரி பிரதேச சபையின் செயலாளர் இரட்ணம் தயாபரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் பிரதம விருந்தினராகக் கலந்து குறித்த சிலையை திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் முன்னாள் தவிசாளர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், முன்னாள் பிரதேச சபை செயலாளர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் உரையாற்றிருந்தார். அவர் தனதுரையில் தெரிவித்தவை வருமாறு –

எங்களுடைய அடையாளங்கள் அழிக்கப்படுகின்றன. நாங்கள் வெற்றிகொண்டவற்றை எல்லாம் வேறு இனம் மாற்றி அடிமையாக வைத்திருக்க நினைக்கிறார்கள். பூநகரியிலிருந்து 2500ஆண்டுகளுக்கு முன்னரான தமிழ் நாகரீகம் தொற்றம் பெற்றது.

இந்த நாடு நேர்மையான ஜனநாயக நாடாக செல்கிறதா? ஆட்சி ஜனநாயகத்தில்தான் நிற்கிறதா? இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதி கிட்டத்தட்ட 40 ஆண்டுகள் ஆகின்றன. சின்ன சின்ன சரத்துக்களை கூட நடைமுறைப்படுத்தவில்லை.

ஜனாதிபதி சொல்லியிருக்கிறார். நாட்டில் தேர்தல் நடைபெற்றால் எந்த கட்சியும் 50 வீதத்தை கூட பெறமுடியாது என்று. கடந்த தேர்தலில் இவருடைய கட்சி பூச்சியம் வாக்குகளைப் பெற்றிருந்தது. எந்தவொரு தொகுதியிலும் வெற்றி பெறவில்லை. சூழ்ச்சிமூலமே ஜனாதிபதியாக வந்தார். தன்னைப்போலவே ஏனைய கட்சிகளும் குழம்பியுள்ளன என சிங்கள மக்களிடம் மாயையை உருவாக்கி ஜனநாயகத்தைக் குழிதோண்டி புதைக்க முனைகின்றார்.தேர்தல் நடத்தாத ஆட்சியை கொண்டு செல்ல முனைகின்றார்.

அலிசப்ரி சொல்கிறார் புலம்பெயர்ந்தவர்களை பயன்படுத்தி தமிழ் மக்கள் ஆயுத கலாசாரத்தை உருவாக்கக்கூடாது என்று. கடந்த இரண்டு மூன்று நாள்களுக்கு முன்பு நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் அவர்களை சுட முயற்சித்தனர் இந்த அரசாங்கத்தின் உளவாளிகள். நாங்கள் ஆயுதமற்ற ஜனநாயக உரிமையுடன் கூடிய தீர்வை நோக்கியே நகர்கின்றோம். தொடர்ந்து ஒலி, ஒளிபரப்பு ஒழுங்கு படுத்தல் ஆணைக்குழு தொடர்பாக கேட்கப்பட்டது.

ஒரு ஜனநாயக நாட்டில் மிகப்பெரிய தூணாக இருப்பது ஊடகத்துறை. ஊடகத்துறை மூலமே ஜனநாயக உரிமைகள் மற்றும் மக்களுக்கு உண்மை வருகிறது. ஊடகத்துறையை நசுக்கி அதை அரசாங்கம் அடக்க நினைத்தால் அது அந்தநாட்டுக்குதான் அபகீர்த்தியை ஏற்படுத்தும். ஏற்கனவே ஊடகங்கள் மீது பல சட்டங்கள் இருந்து அந்த செய்தி வெளிவர முடியாது இருந்தது. மீண்டும் இருண்ட யுகத்திற்கு கொண்டு வந்தால் அவருக்கே அது இருண்ட யுகத்தை அளிக்கும் தொடர்ந்து இந்த சட்டத்தை கட்சியாகிய நாம் எதிர்க்கின்றோம். – என்றார். (05 – 113)

# பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிக்க கல்முனையில் திறன்மேம்பாட்டு பயிற்சி பட்டறை!



(நூருல் ஹுதா உமர்)

கல்முனைபிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதிஜ.எல்.எம்றிபாஸின்வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக தாய் சேய் நலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.எச்.ரிஸ்பினால் தெரிவு செய்யப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களின் கீழ் கடமையாற்றும் மேற்பார்வை பொது சுகாதார மாதுக்கள், பொது சுகாதார மாதுக்களுக்கான ஒருநாள் பயிற்சி பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப்பயிற்சி பட்டறையில் பெண்கள் வன்முறைக்கு ஆளாகும் விதம் வன்முறைக்கு ஆளாகுவதை கட்டுப்படுத்துதல் இதனால் ஏற்படும் உளவியல் தாக்கங்கள் விசேடமாக கர்ப்ப காலத்தில் ஏற்படும் உளவியல் மாற்றம் அதனை மேற்பார்வை செய்யும் விதம் போன்ற பல்வேறு தலைப்புகளில் பிரபல உளவியல் வளவாளரும் கல்முனை பிராந்திய உளநலப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியுமான வைத்தியர் எம்.ஜே.நௌபலால் விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

ஆரம்ப சுகாதார நிறுவனங்களை வலுப்படுத்தும் பி.எஸ்.எஸ்.பி. நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கல்முனை சுகாதார சேவைகள் பணிமனை தாய் சேய் நலப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வு பிரதீப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ வாஜித்தலைமையில்நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)



# வறுமைக்கோட்டின் கீழுள்ள மாணவர்களுக்கு திருமலையில் கற்றல் உபகரணங்கள் வழங்கல்!

(ஹஸ்பர்)

திருகோணமலை வெருகல் பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட வறுமைக்கோட்டின் கீழ் வாழும் வட்டுவான் மகா வித்தியாலயம், திருவள்ளுவர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு திங்கட்கிழமை வெருகல் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றதுடன் இதனை திருகோணமலை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் பரமேஸ்வரனின் கோரிக்கைக்கு அமைவாக உலக சுகாதார ஸ்தாபனத்தில் கடமையாற்றும் குணாளன் என்பவரின் முயற்சியின் பயனாக மறைந்த சுரேஸ்குமாரின் நினைவாக கந்தையா தொண்டு நிறுவனத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. சுமார் 47 மாணவ மாணவிகளுக்காக குறித்த பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மாணவர்களின் கற்றல் திறனை அதிகரிக்கவும் வறுமை நிலை கல்விக்குத் தடை இல்லை என்பதை வைத்து கற்றல் உபகர ணங்களின் பிரதிபலனாக எதிர்பார்க்கப்படுகி றது.

குறித்த நிகழ்வில் வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், மாவட்ட செயலக சமூக சேவை திணைக்கள இணைப்பாளர் த.பிரணவன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (05)

# சாய்ந்தமருது மஸ்ஜிதுல் ஆரிபீனில் புனித ஹஜ் வழிகாட்டல் கருத்தரங்கு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது - மாளிகைக்காடு சமூக வழிகாட்டல் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட 'புனித ஹஜ் யாத்திரை வழிகாட்டல் கருத்தரங்கு - 2023' சாய்ந்தமருது மஸ்ஜிதுல் ஆரிபீன் (மக்காம்) பள்ளிவாசலில் அண்மையில் இடம்பெற்றது.

சமூக வழிகாட்டல் அமைப்பின் தலைவரும் சாய்ந்தமருது மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாசலின் பேஷ் இமாமுமான அல்ஹாபிழ் மௌலவி ஏ.எஸ்.எம். நவாஸ் (சூஃபி) தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், காத்தான்குடி ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் பிரதம இமாம் ஜாமிஉழ்ழாபிரீன் அஷ்ஷெய்க் அல் - ஹாஜ் ஏ.எல். எம்.பாயிஸ் (ஹுமைதி) இந்நிகழ்வில் வளவாளராகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் இம்முறை புனித ஹஜ் யாத்திரை மேற்கொள்ளும் 30 பேர் கலந்து கொண்டதோடு, இதன்போது ஹஜ் யாத்திரை பற்றிய வழிகாட்டல் நூல் ஒன் றும் வழங்கப்பட்டு, பல சந்தேகங்களுக்கு செய்முறை விளக்கத்துடன் கூடிய பூரண விளக்கங்களும் வழங்கப்பட்டன. (05)

# 11 வயது மகளைச் சீரழித்த தந்தைக்கு 110 வருட கடூழியச் சிறைத்தண்டனை!

தனது 11 வயது மகளைக் கடுமையாகப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய தந்தைக்கு 110 வருடகடூழியச் சிறைத்தண்டனை விதித்து பலப்பிட்டிய மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அத்துடன், 6 இலட்சம் ரூபா நட்டஈடும், 8 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சந்தேகநபரான தந்தை 2008 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பல சந்தர்ப்பங்களில் தனது மகளை கடுமையாகப் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என ஊரகஸ்மங்ஹந்திய பொலிஸார் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தனர்.

சிறுமியின் தாய் வெளிநாட்டில் இருந்தபோது, தனது தந்தை மதுபோதையில் வந்து தன்னைப் பாலியல் வன்கொடுமை செய்கின்றார் என்று அயலவர் ஒருவரிடம் சிறுமி கூறியிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்ததையடுத்து சந்தேகநபரின் தந்தை கைது செய்யப்பட்டு பலப்பிட்டிய நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவருக்கு எதிராககுற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (02)

# தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்துக்கு தொழில்நுட்ப அதிகாரிகளாக 25 பேர் நியமனம்

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தில் தொழில்நுட்ப அதிகாரிகளாக பணியாற்றுவதற்கு 35 பேர் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.

இதற்கான நிகழ்வு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தில் தொழில்நுட்ப அதிகாரிகள் பதவிகளுக்கு வெற்றிடம் நிலவியது. இதனையடுத்து புதியவர்களை இணைத்துக்கொள்வதற்கு தேசிய மட்டத்தில் பரீட்சை நடத்தப்பட்டது. பரீட்சைமூலம் 35 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வில், அமைச்சர் உட்பட நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, அமைச்சின் செயலாளர் எஸ்.சமரதிவாகர, தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜயதிலக ஹேரத் உள்ளிட்டோரும் பங்கேற்றனர். (05)


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.06.2023இல் வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 23 செவ்வாய்கிழமை 06.06.2023 கதிர் 78

# நாட்டை விட்டு வெளியேற கஜேந்திரகுமாருக்குத் தடை

### கிளிநொச்சி நீதிமன்றம் அதிரடி உத்தரவு

மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வாக்குமூலம் வழங்கும் வரை அவர் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு கிளிநொச்சிநீதிமன்றம்இன்று தடை விதித்தது

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது ருவிட்டர்பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

'கொள்ளுப்பிட்டி பொலிஸார் எனது வீட்டுக்கு வந்து சிங்களத்தில் எழுத்துமூல ஆவணமொன்றை வழங்கினார்கள். என்னால் சிங்களத்தில்வாசிக்க 2



## கம்பளையும் நடுங்கியது!

### இலங்கையில் தொடரும் நில அதிர்வுகள்

கம்பளை பிரதேசத்தில் சிறியளவிலான நிலநடுக்கம் பதிவாகியுள்ளது என்று புவிசரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

நேற்றிரவு இந்த நில அதிர்வு பதிவானது என்றும், பூமியின் மேற்பரப்பில் இருந்து 10 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரிக்டர் அளவுகோலில் 2 என்ற அளவில் சிறிய நிலநடுக்கமாக இது பதிவாகியுள்ளது என்று புவிசரிதவியல் ஆய்வுமற்றும்சுரங்கப்பணியகம்மேலும்தெரிவித்துள்ளது.

இந்த நில அதிர்வு மஹாகனதராவ, ஹக்மன, பல்லேகலைமற்றும்புத்தலஆகியபகுதிகளில்அமைந்துள்ள நில அதிர்வு அளவீடுகளில் பதிவாகியுள்ளது என்றும் அந்தப் பணியகம் குறிப்பிட்டுள்ளது. (02)

## இராணுவ பஸ் மோதி வெளிநாட்டவர் சாவு!

இராணுவபஸ்மோதியதில் வெளிநாட்டவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் காலி - கொழும்பு பிரதான வீதியின் ஹிக்கடுவ பகுதியில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

70 வயதுடைய வெளிநாட்டுப் பிரஜையே இதன்போது உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இராணுவ பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும்பொலிஸார்மேலும் குறிப்பிட்டுள்ளனர். (02)

## கஜேந்திரகுமார் மீதான தாக்குதல்; பொலிஸாரிடம் நாளை விசாரணை

### அழைப்பாணை அனுப்பியது மனித உரிமைகள் ஆணைக்குழு

ந.லோகதயாளன்.

மருதங்கேணியில் நாடாளுமன்ற உறுப்பினர் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் மீது பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கை தொடர்பில் நாளை விசாரணைக்கு வருமாறு பொலிஸாருக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது மனிதஉரிமைகள்ஆணைக் குழுவின்யாழ். அலுவலகம்.

நாடாளுமன்ற உறுப்பினர்பொன்னம்பலம்கஜேந்திரகுமாரினால் இலங்கை மனிதஉரிமைகள்ஆணைக் குழுவின் யாழ்ப் பாண காரியாலயத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பில், சம்பவத்துடன்தொடர்புடைய பொலிஸாரை நாளைய தினம் வாக்குமூலம்வழங்குவதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண காரியாலயத்துக்குசமூகமளிக்குமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ்இந்தஅழைப்பை விடுத்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மக்களை சந்தித்த வேளை சிவில் உடைதரித்த பொலிஸார் அதற்குள் நுழைந்து நாடாளுமன்ற உறுப்பினரைத்தாக்கமுற்பட்டனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் தரப்பிலும் தமது கடமைக்கு இடையூறு விளைவித்தனர் என்று பொலிசாரும் குற்றஞ்சாட்டி வரும் நிலையில் இந்த விசாரணைக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## லொறி-ஹயஸ் மோதி விபத்து 2 பேர் அந்த இடத்திலேயே சாவு

### மேலும் மூவர் வைத்தியசாலையில்



திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் கனரக (லொறி) வாகனத்துடன் ஹயஸ் வான் மோதி விபத்துக்குள்ளானதில்இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். அத்துடன் மூவர்காயமடைந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து இன்று காலை அலுத்ஒயா, சிங்ககம பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து கிண்ணியா நோக்கிச் சென்ற ஹயஸ்வானும், திருகோணமலையிலிருந்து 2

## சர்வதேசத்துக்கு மலையகம் பற்றிய தெளிவு எம்மால் ஏற்படுகின்றது

### உரிமை கோருகிறார் மனோ கணேசன்

அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஜப்பான், பிரான்ஸ், ஆஸ்திரேலியா ஆகிய நாட்டு தூதுவர்களுடனும், அந்தந்த நாடுகளில் இருந்து இலங்கைக்கு வந்து போகும் ஐ.நா., உலக வங்கி உட்பட பன்னாட்டு நிறுவன மற்றும் அரச பிரதிநிதிகளுடனும் தமிழ் முற்போக்குக் கூட்டணி தொடர்ச்சியாக நடத்தி வரும் கலந்துரையாடல்கள் மற்றும் அவர்களுக்கு எம்மால் வழங்கப்பட்டுள்ள எழுத்து மூலமான ஆவணங்கள் காரணமாக இலங்கை இந்தியவம்சாவளிமலையகத் தமிழர் தொடர்பான போதிய தெளிவு தற்போது இலங்கை தொடர்பான சர்வதேச சமூகத்துக்குஏற்பட்டுவருகின்றது. இன்னமும் பலநாட்டு தூதுவர்களுடனும்,பன்னாட்டு நிறுவனங்களுடனும் நாம் எதிர்வரும் வாரங்களில் பேசவுள்ளோம்.

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. இன்று ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

''மத்திய, மேல், சப்ரகமுவா,ஊவா,தென்மாகாணங்களில்வாழும்சுமார்15இலட்சம் மலையக தமிழரின் தேசிய அரசியல் அபிலாஷைகள் மற்றும் அவர்கள் மத்தியிலான பெருந்தோட்ட பிரிவினரின் மிகவும் பின்தங்கிய வாழ்வாதார நிலைமைகள் தொடர்பான எமது தொடர்சியான வலியுறுத்தல்கள் இன்று பலனளிக்கஆரம்பித்துள்ளன. இது மகிழ்ச்சியை தரும் ஒரு வளர்ச்சி மைல்கல்லாகும்' - என்றும் மனோ கணேசன் எம்.பி. குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்மனோகணேசன் மேலும் கூறியதாவது:-

நம்மைஆளும், ஆண்ட அரசுகள்எம்மைமாற்றாந்தாய் பிள்ளைகளாகநடத்தும்போது, நாம் அயலவரை நாடி எமது நியாயமானஎதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக்கொள்ள முயல்வது மிகவும் இயல்பானதாகும்.இதில்தவறில்லை. இருந்தால், அரசிடமே தவறு இருக்கின்றது. இது பற்றிய தெளிவுஎன்னிடம்நிறையவே இருக்கின்றது. 2

## சென்னை – கொழும்பு இடையிலான சொகுசு கப்பல் சேவை தொடக்கம்

### கொடியசைத்து அனுப்பி வைத்தார் மத்திய அமைச்சர் சோனோவால்

ந.லோகதயாளன்.

தமிழ்நாடு, சென்னை - கொழும்புஇடையிலானமுதல் சர்வதேசபயணிகள்சொகுசுக் கப்பலான "எம்.வி எம்பிரஸ்" நேற்றுசென்னையில்இருந்து தனது முதல் பயணத்தைத் தொடங்ககியது. இந்தியாவின் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சர் சர்பானந்தா சோனோவால் கொடியசைத்து அதனைத் தொடங்கி வைத்தார்.





இந்தியாவின்சென்னை துறைமுகத்தில் 172.1 மில்லியன் இந்திய ரூபாய் செலவில்அமைக்கப்பட்டுள்ள சர்வதேச கப்பல் சுற்றுலா முனையத்தின் திறப்பு விழாவின்போது இலங்கைக்கான சுற்றுலா பயணிகள் கப்பல் சேவையும் தொடக்கப்பட்டது.

2,880 சதுர மீற்றர் பரப்பளவு கொண்ட இந்தக் கப்பலில் 3,000 பயணிகள் ஒரேதடவையில்பயணிக்கும் வசதி உள்ளது.

2022ஆம் ஆண்டு நடைபெற்ற இன்க்ரெடிபிள் இந்தியா இன்டர்நேஷனல் க்ரூஸ்மாநாட்டில் உள்நாட்டு மற்றும் சர்வதேச கப்பல் சேவைக்காக சென்னை துறைமுகம் மற்றும் நீர்வழிகள் ஒய்வு சுற்றுலாவுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னணியில் இந்த கப்பல் சேவை தொடங்கப்பட்டுள்ளதாக துறைமுகம்மற்றும் நீர்வழிகள் அமைச்சு தெரிவித்துள்ளது. சென்னைக்கும் இலங்கைக்கும்இடையேமுதல் கப்பல்சேவையை தொடங்கியுள்ளதால், அது நாட்டில் கப்பல் சுற்றுலாத் துறையில் ஒரு புதிய அத்தியாயத்தை உருவாக்கியுள்ளது, ''என்று இந்திய அமைச்சர் சோனோவால் மேற்கோள் காட்டியுள்ளார்.



## மாகாண தேர்தல்கள் திருத்த வரைவு அரசமைப்புக்கு முரணானது அல்ல

### உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவிப்பு

மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தில் திருத்தங்களைச் செய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால்முன்வைக்கப்பட்ட தனிநபர் சட்டமூலம் அரசமைப்புக்குமுரணானது அல்லஎன்றுஉயர்நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவித்துள்ளது. அது குறித்து சபாநாயகர் இன்று சபையில் அறிவித்தார்.

அரசமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'மாகணசபை தேர்தல்கள் (திருத்தம்)' எனும்சட்டமூலம்தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனு மீதான உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புத் தனக்குக் கிடைத்திருப்பதாக சபாநாயகர் அறிடுவித்தார்.

சட்டமூலத்தின் 3 ஆம் வாசகத்தினைதிருத்துவதற்கும் மற்றும் 4ஆம் வாசத்தினை நீக்குவதற்குமான உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு உட்பட்டுசட்டமூலமோஅல்லது அதன் எந்த ஏற்பாடுகளுமோ அரசியலமைப்புக்கு முரணானவை 2

## 60 மருந்துகளின் விலைகள் 16 சதவீதத்தினால் குறையும்

### ஜூன் 15 முதல் நடைமுறைக்கு

நாட்டில் அத்தியாவசிய மருத்துவதேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற 60வகையானமருந்துகளின் விலைகளை, ஜூன் 15 முதல் அமுலாகும் வகையில் 16 சதவீதத்தினால் குறைக்கப்படும் என்று சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று இடம்பெற்ற வாராந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மருந்துகளின் விலைகள் 16 சதவீதத்தினால் குறைக்கப்படவுள்ளன. வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அதிகரிக்கப்பட்ட 60 வகையான மருந்துகளின் விலைகள் குறைக்கப்படும். ஏனைய மருந்துகளின் விலைகளும் படிப்படியாகக் குறையும்.

2015 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட தேசிய மருந்துகள் 2

## மட்டக்களப்பு இளைஞர் வல்வெட்டித்துறை கேணியில் மூழ்கிச் சாவு

யாழ்., வடமராட்சி, வல்வெட்டித்துறை - கம்பர் மலை ஆலயக் கேணியில் குளித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பைச்சேர்ந்த ஜெகன்ஜெனோசாந் (வயது - 22) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

ஆலயத் திருவிழாவுக்காக திருகோணமலை மற்றும்மட்டக்களப்பைச்சேர்ந்த இளைஞர்கள் வல்வெட்டித்துறையில் வந்து தங்கி நின்றுள்ளனர்.

ஆலயதீர்த்தத்திருவிழா முடிவடைந்தபின்னர்மூன்று இளைஞர்கள் கேணியில் குளித்துள்ளனர்.இதன்போதே மேற்படி இளைஞர் மூழ்கி உயிரிழந்துள்ளார். இந்த இறப்புத் தொடர்பான விசாரணையைவல்வெட்டித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி ச.சிவராஜா நேற்று மேற்கொண்டார். (02)

## வற்றாப்பளை சென்று திரும்பிய இளைஞர் விபத்தில் உயிரிழப்பு



யாழ்ப்பாணம் வரணி பகுதியில் இன்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் பயணித்தஇளைஞரொருவர் மின்கம்பத்தில் மோதி உயிரிழந்தார்.

குடத்தனை பகுதியைச் சேர்ந்த நிறோஜன் என்ற 31 வயதான இளைஞரே இவ்வாறுஉயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு, வற்றாப்பளை கண்ணகி 2

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



## சர்வதேச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, யாரும் இனவாதிகள் அலட்டிக்கொள்ள வேண்டியதில்லை.

எந்தவொரு முயற்சியும் ஒரே இரவில் பயன் தரப்போவதில்லை. படிப்படியான இடைவிடாத முயற்சிகளின் பின்னரே பயன் கிடைக்கும் என்பது எமக்கு நன்கு தெரியும்.

எம்மை நோக்கிய இந்த சர்வதேச கவனத்தை எமது மக்களுக்கான ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளாக மாற்ற நாம் நன்கு திட்டமிட்டுள்ளோம். அதன் விபரங்களை அடுத்து வரும் நாட்களில் நாடு அறிந்து கொள்ளும் என கூட்டணி தலைவர் என்ற முறையில் இப்போதே கூறி வைக்கின்றேன்.

நாம் சர்வதேச அரசு முறைபிரதிநிதிகள், தூதுவர்கள் ஆகியோருடனும் மற்றும் யூ.எஸ்.எய்ட்., உலக வங்கி உட்பட்ட இலங்கையின் அபிவிருத்தி பங்காளி நிறுவனங்களுடனும் பேசுகின்றோம்.

"இலங்கைக்கு நீங்கள் தரும் நன்கொடைகள், உதவிகள், கடன்கள் இலங்கையில் மிகவும் பின்தங்கிய எமது மக்கள் பிரிவினருக்கும் கிடைப்பதை உறுதி செய்யுங்கள்" என நாம் வலிந்து வலியுறுத்துகின்றோம்.

இன்று அரசு முன்னெடுக்கவுள்ள 'அஸ்வெசும-ஆறுதல்' என்ற நாளாந்த பிரிவினருக்கான கொடுப்பனவுகள் தொடர்பிலும் நாம் எடுத்த முன்நகர் நடவடிக்கை இன்று உலக வங்கியினதும், அரசினதும், சர்வதேச சமூகத்தினதும் கவனத்தைப் பெற்றுள்ளது. 'அஸ்வெசும - ஆறுதல்' திட்டம் தொடர்பாக, உலக வங்கியுடனான எமது அடுத்த கட்ட காத்திரமான பேச்சுகள் அடுத்துவரும் சில நாட்களில் நடைபெறும்.

நாம் அரசில் அங்கம் வகிக்கும் போதும் கணிசமாக பணி செய்தோம். இன்று அரசில் அங்கம் வகிக்கவில்லை என்பதற்காக, நாம் அங்கம் வகிக்கும் எமது அரசு மீண்டும் உருவாகும் வரை சும்மாவே இருக்கவும் மாட்டோம். எதிரணியில் இருந்தபடி பணி செய்கின்றோம்.

எமது இந்தக் கொள்கையை கவனத்தில் எடுக்க நமது மக்களையும், சமூக முன்னணியாளர்களையும் கூட்டணி தலைவர் என்ற முறையில் நான் வேண்டுகின்றேன்- என்றார். (02)

## நாட்டை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியாது என்பதால் அதனை நான் ஏற் றுக்கொள்ள மறுத்தேன். அதன் பின்னர் சிங்களத்தில் அதனை வாசித்த அவர்கள் நான் அதற்குக் கட்டுப்பட வேண்டும் எனத் தெரிவித்தனர்.

மருதங்கேணி பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் நான் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலம் வழங்கும் வரை நாட்டை விட்டு தடைவிதிக்கக் கோரும் வேண்டுகோளை கிளிநொச்சி மாவட்ட நீதிவானிடம் பொலிஸார் விடுத்துள்ளனர்.

அதற்கமைய நான் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் வாக்குமூலத்தைத் பதிவு செய்யும் வரை என்னை வெளிநாடு செல்வதற்கு அனுமதியளிக்க வேண்டாம் என நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.- என்று கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார். (02)

## வற்றாப்பளை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்மன் ஆலய பொங்கல் விழாவிற்குச் சென்றுவிட்டு யாழ். மாவட்டம், வடமராட்சி கிழக்கில் அமைந்திருக்கும் குடத்தனையில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருக்கும் வழியில் விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்றுள்ளது. சடலம் உடல் கூற்றாய்வுகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பிக்கப்பட்டது.

## லொறி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புக்குச் சீமெந்து மூடைகளை ஏற்றிச் சென்ற கனரக வாகனமும் இவ்வாறு மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன என்று ஹபரன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் ஹயஸ் வானில் பயணித்த கிண்ணியா பகுதியைச் 45 மற்றும் 47 வயதுடைய இருவரே உயிரிழந்துள்ளனர்.

ஹயஸ் வானில் பயணித்த மற்றொருவர் பலத்த காயங்களுடன் தம்புள்ளை வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, கனரக வாகனத்தின் சாரதியும், உதவியாளரும் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபரன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (02)

## மாகாண .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிடையாது என உயர்நீதிமன்றம் தீர்மானித்திருப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்தார்.

## 60 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் மருந்துகளின் விலைகள் தீர்மானிக்கப்படவுள்ளன. அது தொடர்பான அனைத்து விடயங்களுக்குமான ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தமையைக் கருத்திற்கொண்டு, மருந்துகளின் உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை ஒருசில சந்தர்ப்பங்களில் 97 சதவீதத்தினால் அதிகரிப்பதற்கு சுகாதார அமைச்சு அனுமதி வழங்கியது.

எமது ஆட்சியின் சமகால பொருளாதார உறுதிப்பாட்டு வேலைத்திட்டத்தின் விளைவாக டொலரின் பெறுமதி குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளது. அதற்கமைய, 60 வகையான மருந்துகளின் உயர்ந்தபட்ச சில்லறை விலைகளை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் 16 சதவீதத்தினால் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அது மாத்திரமின்றி 3 மாதங்களுக்கொருமுறை மருந்துகளின் விலைகளை மீளாய்வு செய்வதற்காகவும் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதற்கமைய 3 மாதங்களுக்கொருமுறை மருந்துகளின் விலைகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் -என்றார்.

# அணுசோதனை – தடை ஒப்பந்த அமைப்பின் நிறைவேற்று செயலர் – நஸீர் சந்தித்து பேச்சு

அணுசோதனை - தடை ஒப்பந்த அமைப்பின் நிறைவேற்றுச் செயலாளர் டாக்டர் ரொபட் ப்ளோவட் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொறியியலாளர் நஸீர் அஹமத் உடனான உயர்மட்ட சந்திப்பொன்று சுற்றாடல் அமைச்சில் நேற்று (திங்கட்கிழரத) இடம்பெற்றது. இதில் அமைச்சின் செயலாளர் கலாநிதி அனில் ஜாசிங்கவும் கலந்து கொண்டார்.

பரந்த தொழில் நுட்பம் - விஞ்ஞானம் என்பவற்றை பரந்த அடிப்படையில் சகலருக்கும் பயனளிக்கும் விதத்தில் உறவை முன்னெடுப்பது தொடர்பாக அமைச்சர் வலியுறுத்தியதுடன் அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் அவசியம் தொடர்பாகவும் விளக்கினார்.

1996 இல் ஒக்ரோபர் 24 இல் அணுசோதனை தடை ஒப்பந்தத்தில் இலங்கையும் கைச்சாத்திட்டது.

2000 ஆம் ஆண்டில் தொழிநுட்பவசதி தொடர்பான ஒப்பந்தத்தின் பின்னர் அதன் அடிப்படையிலான துணை நில அதிர்வு நிலையமொன்று பல்லேகலையில் அமைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் நஸீர் அஹமட், அணு இல்லாத உலகம் என்ற இலக்கை அடைவதற்கு எமது நாடு பூரண ஒத்துழைப்பை அர்ப்பணிப்புடன் செய்து வருவதாகவும் சுட்டிக் காட்டினார்.



புவியியல் ஆய்வு சுரங்கப் பணியகம் என்பனவும் இத்திட்டத்தில் அமுல்நடத்தப்பட்டு வருகின்றது. (05)

# புசல்லாவை, பெரட்டாசி தோட்டத்துக்கு பஸ் சேவை ஆரம்பிக்கக்கோரி போராட்டம்

புசல்லாவை, பெரட்டாசி தோட்டத்திற்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் சேவையை உடன் ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி நேற்று (திங்கட்கிழமை) மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புசல்லாவை, கெமுனுபுர சந்தியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் தோட்ட மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.







கடந்த மே 27 ஆம் திகதி இ.போ.ச. பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கான அனுமதியை கம்பளை டிப்போ வழங்கியிருந்தது. பஸ் சேவை ஆரம்ப நிகழ்வை நடத்துவதற்கான ஏற்பாடுகள் கூட இடம்பெற்றிருந்தன.

எனினும், கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலையீட்டால் பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது அனுமதிக்க முடியாத செயல் என போராட்டத்தில் பங்கேற்றோர் கோஷங்களை எழுப்பினர். அத்துடன், தமது கண்டனங்களையும் வெளியிட்டுள்ளனர்.

பெரட்டாசி வீதி ஊடாக பேரணியாக வந்த மக்கள், கெமுனுபுர சந்தியை வந்தடைந்த பின்னர் போராட்டத்தை முன்னெடுத்தனர். உடனடியாக இ.போ.ச பஸ் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும் என இடித்துரைத்தனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அமெரிக்காவில் பரவுகிறது புதிய வைரஸ்; எச்சரிக்கையாக இருக்கின்றது இலங்கை!

அமெரிக்காவில் எச்.எம்.பி.வி. எனப்படும் அதிகம் அறியப்படாத சுவாசவைரஸ்அண்மைக்காலமாக அதிகரித்துவருவதை அடுத்து, வைரஸின் புதிய விருத்திகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் எச்சரிக்கையுடன் இருப்பதாகவும் இலங்கை சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் பரவும் எந்த வொரு புதிய நோயும் இலங்கைக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என சுகாதார அமைச்சு எப்போதும் எச்சரிக்கையுடன் இருப்பதாக சுகாதார அமைச்சின் டாக்டர் அன்வர் ஹம்தானி தெரிவித்தார்.

'அமெரிக்காவில் பரவும் வைரஸைப்பொருத்தவரை,நாங்கள் நிலைமையை கண்காணித்து வருகிறோம்' என அவர் கூறினார்.

இதேவேளை, சுகாதார அமைச்சின் மற்றொரு அதிகாரி 'அமெரிக்காவிற்கு வெளியே இது ஆபத்தான கட்டத்தை எட்டவில்லை என்பதால் மக்கள் பீதியடையத் தேவையில்லை. இருப்பினும், கொவிட்-19தொற்றுநோயைநாங்கள் கண்டது போல் எல்லைகளுக்கு அப்பால் பரவுவதற்கான வாய்ப்பு எப்போதும் இருக்கிறது' இ - என்றார்.

எச்.எம்.பி.வி. என்பது ஒரு வைரஸ் தொற்று ஆகும், மேலும் இது முதற்கட்டமாக மேல் சுவாசக் குழாயைப் பாதிக்கிறது. 2001 ஆம் ஆண்டில் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரஸ், பொதுவாக அறியப்பட்ட சுவாச ஒத்திசைவு வைரஸ் அல்லது ஆர்.எஸ்.வி. உடன் குழுமத்தில் இருக்கிறது.

நோய்கட்டுப்பாடு மற்றும்தடுப்பு நிலையங்களின் அறிக்கைகளின் பிரகாரம் மார்ச்நடுப்பகுதியில் அதன் உச்சத்தில், கிட்டத்தட்ட 11 சதவிகிதம் சோதனை செய்யப்பட்ட மாதிரிகள் அமெரிக்காவில் எச்.எம்.பி.விக்கு நேர்மறையாக இருந்தன, இது சராசரியைவிட 36சதவிகிதம்அதிகம்.

இந்த வைரஸ் சளி, காய்ச்சல் மற்றும்கொவிட்-19போன்றுகுறைந்த நுரையீரல் தொற்று, சிறிய அல்லது அடிக்கடி இருமல் ஏற்படுதல், சளி, தொண்டைப்புண் மற்றும் காய்ச்சல் ஆகியஅறிகுறிகளைஏற்படுத்துகிறது,

பொதுவாக, இளம் பிள்ளைகள் மற்றும்வயதானவர்கள்எச.எம்.பி.வி. நோயால் பாதிக்கப்பட்ட பிறகு மிகவும் கடுமையான நோயுடன் நோய்க்குள் தள்ளப்படுகிறார்கள். ஏனெனில் அவர்கள் வைரஸால் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள். எச்.எம்.பி.விக்கு தடுப்பூசி அல்லது வைரஸ்தடுப்புமருந்துஇல்லாததால், அவர்களின் நோய் அறிகுறிகளுக்கு மருத்துவர்களால் நேரடியாக சிகிச்சையளிக்கப்படுகிறது.

எச்.எம்.பி.வி. வைரஸ், இருமல், தும்மல், தொடுதல் அல்லது கைகுலுக்குதல், வைரஸ் உள்ள பொருள்கள் அல்லது பரப்புகளைத் தொடுதல் மற்றும் ஒருவருடன் நெருங்கிய தொடர்பு மூலம் பாதிக் கப்பட்ட நபரிடமிருந்து மற்றவர்க ளுக்குப் பரவ வாய்ப்புள்ளது.

இருமல் அல்லது தும்மலின் போது வாய் மற்றும் மூக்கை மூடிக்கொள்வதுமற்றும்அடிக்கடிகை கழுவுதல்போன்றநல்லசுகாதாரத்தை முதன்மை அணுகுமுறை ஆகும்.

இந்த நோய் தொடர்பில் கருத்து தெரிவித்த அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்க ஊடகப் பேச்சாளர் வைத்தியர் சமில் விஜேசிங்க, 'இந்த தொற்று அவசர நிலையை எட்டாதபோதிலும் விமான நிலை யங்கள், துறைமுகங்கள் ஆகிய இலங்கைநுழைவாயில்கள் ஊடாக தொற்றாளர்கள் வருவதைத் தடுக்க கண்காணிப்புகள் அதிகரிக் கப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் இன்னும் அவசர நிலையை பிரகடனப்படுத்தவில்லை. அமெரிக் காவில் தொற்றுகள் அதிகரித்து வருகின்றன. இருப்பினும், கொவிட்-19 தொற்றுநோய் போன்ற அழிவைத் தவிர்க்க இலங்கை அவதானத்துடன் செயற்படுவதுநல்லது. - என்றார். (05)

# கொழும்பில் அமைந்துள்ள பழங்காலக் கட்டடங்களை வரலாற்று தொன்மையுடன் நவீனப்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க திட்டம்



பழங்கால கட்டடங்களின் தொன்மையைப் பாதுகாக்கும் வகையில் நவீனமயமாக்கவும், முதலீட்டு வாய்ப்புகளை உரு வாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன்பேச்சுநடத்தி வருவதாகநகர அபிவிருத்திமற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கமற்றும்ஜோர்ஜியாவின் இலங்கைப்பிரதிநிதி திருமதி நினோ மக்விலாட்சே உள்ளிட்ட ஜோர்ஜிய முதலீட்டாளர்கள் குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இதனைத்தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடல் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சில் இடம்பெற்றது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டில் உள்ள இலங்கையிலுள்ள புராதன கட்டடங்களை முதலீட்டு வாய்ப் புகளுக்காக உரிய முறையில் பயன்படுத்துவது மற்றும் ஜோர்ஜிய முதலீட்டாளர்களுக்கு அந்த முதலீட்டு வாய்ப்புகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

கொழும்புகபூர்கட்டடம்மற்றும் கொழும்பு 'எய்ட் கிளப்' கட்டடம் என பல இடங்கள் இதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன என நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்தக் கட்டடங்கள் வரலாற்று தொன்மைக்குசேதம்விளைவிக்காத வகையில்நவீனமயப்படுத்தப்படும் என அமைச்சர் பிரசன்னரணதுங்க தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் உள்ள பெரும் பாலான பழைமையான கட்டடங் கள் முறையான பராமரிப்பு இல்லாததால் பாழடைந்து வரு கின்றன.

அவற்றை நவீனமயமாக்கி முதலீடுகளுக்கு உரிய முறையில் பயன்படுத்துவதன்மூலம்நாட்டுக்கு வருமானம் ஈட்ட முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

கடந்த காலத்தில் நாடு எதிர் கொண்ட பொருளாதார நெருக்கடி மெல்ல மெல்லத் தீர்க்கப்பட்டு வரு கிறது. எனவே, எதிர்காலத்தில் இந்த நாட்டில் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஆதரவு கிடைக்கும் என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இந்த வேலைத்திட் டத்தை விரைவில் நடைமுறைப்ப டுத்துமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்தத் திட்டத்துக்குப் பயன்ப டுத்தக்கூடிய வேறு இடங்களைத் தேடி அதற்கேற்ற வேலைத்திட் டத்தைத்தயாரிக்குமாறும்அமைச்சர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

தற்போது நாடு முழுவதிலும் உள்ள இவ்வாறான இடங்கள் தொடர்பான தகவல்களை பெற்று வருவதாகவும், எதிர்காலத்தில் அந்த இடங்களையும் இந்த வேலைத்திட்டத்துக்கு பயன்படுத்த முடியும் எனவும் நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத், பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, பிரதி பணிப்பாளர் நாயகம் (சொத்து) ஈ.ஏ.சி. பிரியசாந்த உள்ளிட்ட அதிகாரிகள் குழு இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டது. (05)

# களுத்துறையில் கடும் மழை வெள்ளத்தில் மூழ்கின வீதிகள்

## பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு கடற்படை உதவி!



களுத்துறை மாவட்டத்தின் பல பிரதே சங்களில் நேற்று பெய்த கடும் மழையால் அந்தப் பிரதேசங்களில்உள்ளவீதிகள் வெள்ளத்தில் மூழ்கின.

இதன் காரணமாக போக்குவரத்துபாதிக்கப்பட்டு பரீட்சைக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொண்ட கல்வி பொதுத் தராதர சாதரணதரப் பரீட்சைக்கு தோற்றவிருந்த மாண வர்களை கடற்படையினர் படகுகள்மூலம்ஏற்றிச்சென்று பரீட்சைக்குத் தோற்ற உதவினர்.

களுத்துறைமாவட்டம், பதுரலியலத்பந்துரபகுதியில் திங்கட்கிழமை காலை ஏற்பட்ட திடீர் வெள்ளம் காரணமாக பெரும் சிர மத்தை எதிர்கொண்ட கல்விப் பொதுத்தராதர சாதாரண தர வகுப்பு மாணவர்க ளுக்கு கடற்படை நிவாரணக் குழுக் கள் உதவின. க.பொ.த பரீட்சைக்கு தோற்விருந்த மாணவர்களை ஏற்றிச் செல்ல கடற்படை படகுச் சேவையை வழங்கியது. மேலும், பாதிக்கப்பட்ட மக்கள் எதிர்கொள்ளும் இன்னல்களைப் போக்குவதற்கும் கடற்படை நிவாரணக் குழுக்கள் ஒத்தாசை புரிந்தன.

அத்துடன் களுத்துறை மாவட் டத்தில் சில பகுதிககளில் அதிகாலை யில்தொழில்களுக்கு சென்றமக்கள் மாலையில் வீடு திரும்புவதில் பெரும் சிரமத்தை எதிர்நோக் கினர்.

அகலவத்தை குடலிகம ஊடாக ஹொரண வீதியில் பல இடங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. களு கங்கையின் கிளை நதியான கலக் கால்வாய் நிரம்பி வீதிகளில் வெள்ளம்பெருக்கெடுத்தோடுவதை அவதானிக்க முடிந்தது.

சில இடங்களில் நான்கு அடிக்கு தண்ணீர் இருந்தது. இதனால், போக்குவரத்தும் பாதிக்கப்பட்டது. மக்கள் வெள்ளநீரில் நடந்துசெல்ல நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இது இவ்வாறிருக்க, ஒரு மணித்தியாலத்தில் 100 மில்லிமீற் றருக்கும் அதிகமான மழை பெய் துள்ளதாக மாவட்ட அனர்த்த முகா மைத்துவ நிலையம் தெரிவித் துள்ளது. (05)

# தாயின் காஸ் விநியோக நிலையத்துக்கு வந்த வாகனத்தை சிலிண்டர்களுடன் கடத்திய மகன்

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் இருந்து 648 வெற்று காஸ் சிலிண்டர்களுடன் கடத்தப் பட்ட வாகனம் நெளுக்குளம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று (திங்கட்கிழமை) காலை இடம்பெற்ற இந்தச் சம்ப வம் தொடர்பில் மேலும் தெரியவ ருவதாவது - வவுனியா, நெளுக் குளம் பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றைநடத்திவரும்பெண்ஒருவர் காஸ் விநியோகத்திலும் ஈடுபட்டு வருகின்றார்.

இந்நிலையில் குறித்த பெண் ணின் வர்த்தக நிலையப் பகுதிக்கு வந்தகாஸ்விநியோகவாகனம்648 வெற்றுக் காஸ் சிலிண்டர்களுடன் அங்கு நிறுத்தப்பட்டிருந்தது.

இதன்போது, அங்கு வந்த குறித்த பெண்ணின் மூத்த மகன் வெற்றுக் காஸ் சிலிண்டருடன் அங்குநின்றவாகனத்தைஎடுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளார்.

இதனையடுத்து குறித்த பெண் தனது மகனுக்கு எதிராக நெளுக்குளம் பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் குறித்த வாகனத்தை வெற்று சிலிண்டர்களுடன்மீட்டுள்ளதுடன், குறித்த நபரையும் கைது செய்துள் ளனர்.மேலதிக விசாரணைகளின் பின் குறித்த நபரையும் வாகனத் தையும் நீதிமன்றில் முற்படுத்த நெளுக்குளம் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (05)

# பாதாள உலகக் குழுவைப் போன்றே தொழிற்சங்கங்கள் செயற்படுகின்றன

## நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு விசனம்

மூலப் பொருள்களின் விலை அதிகரிக்கும் போது மறுகணமே உணவுப்பொருள்களின்விலையை அதிகரிக்கும் சங்காங்கத்தின் தலை வர்கள், மூல பொருள்களின் விலை குறைவடையும்போதுகுருடர்களாகி விடுகின்றர்.

சங்கங்கள் பாதாள குழு வினரை போல் மனசாட்சி இல் லாமல் செயற்படுகின்றன என நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப் பின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப் பிட்டவை வருமாறு -

எரிவாயுவின் விலை 452 ரூபாவால் குறைவடைந் துள்ள நிலையில் வெதுப்பக உண வுப் பொருள்களின் விலையை குறைக்க முடியாது என வெதுப்பக சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டில் உள்ள வெதுப்பகங்க ளில் 75 சதவீதமான வெதுப்ப கங்கள் மின்சாரத்தில் இயங்கு கின்றன என்று வெதுப்பக உரிமையாளர் சங்கத்தினர் குறிப்பிடுகின்றமை ஆச்சிரியத் துக்குரியது.

மூலப் பொருள்களின் விலை அதிகரிக்கும் போது மறுகணமே உணவுப் பொருள் களின் விலையை அதிகரிக்கும் சங்கத்தின் தலைவர்கள் மூலப்பொ ருள்களின் விலை குறை வடையும் போது குருடர்களாகி விடுகின்றனர்.

கடந்த ஆண்டு எரிபொ ருள், மின்சார கட்டணம் மற்றும் எரிவாயு அதிகரிக்கும் போது கட்டம் கட்டமாக உணவுப்பொருள் களின் விலை அதிகரிக்கப்பட் டன. நாட்டு மக்கள் குறிப் பாக நடுத்தர மக்கள் பொருளா தார ரீதியில் மோசமாக பாதிக் கப்பட்டுள்ள நிலையில் தொழிற் சங்கத்தினர் பாதாள குழுவினரை போல் மனசாட்சி இல்லாமல் செயற்படுகிறார்கள்.

அத்தியாவசியப் பொருள் களின் விலை குறைவடைந் தாலும் அதன் பயன் ஒட்டு மொத்த மக்களையும் சென்றடை வதில்லை. வர்த்தகர்களும், தொழிற் சங்கத்தினர் மாத்திரம் பயன் பெற்றுக்கொள்கிறார்கள்.

நாட்டில்நுகர்வோர்அதிகாரசபை என்பதொன்று உள்ளதா என்ற சந்தேகம் காணப்படுகிறது. அத்தியா வசியப் பொருள்களுக்குக் கட்டுப் பாட்டு விலை என்பதொன்று இல்லாத காரணத்தால் வர்த்த கர்களேவிலைகளைத்தீர்மானித்துக் கொள்கிறார்கள்.

நுகர்வோர் இருந்தால் தான் வர்த்தக நடவடிக்கை களை முன்னெடுக்க முடியும் என்பதை வர்த்தகர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். - என்றார். (05)

# தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை தியாகி சிவகுமாரனின் தியாகம் வீண்போகாது

## தர்மலிங்கம் சுரேஸ் உரை

1970 ஆம் ஆண்டில் சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆட்சி காலத்தில் கல்வி தரப்படுத் தலால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டதையடுத்து அதனை மையமாக வைத்து ஆரம்பித்த போரட்டம் காரணமாக முதற் செயற்பாட்டாளராக செயற்பட்டு முதலில்சயனைடை உட்கொண்டு வீரமரணம்அடைந்ததியாகிபொன். சிவகுமாரன் முக்கிய இடத்தை பிடித்தவர்என்பதுவரலாறு. எனவே தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை இப்படிப்பட்ட தியாகங்கள் ஒருபோதும் வீண் போகாது என தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி கட்சியின் தேசிய அமைப் பாளர்தர்மலிங்கம்சுரேஸ்தலைமை யில் கட்சி காரியாலயத்தில் நேற்று (திங்கட்கிழமை) தியாகி பொன் சிவகுமாரன் 49 ஆவது நினைவேந்தல் இடம்பெற்றது.

இதில் கட்சி உறுப்பினர்கள் ஆதரவாளர்கள் கலந்துகொண்டு அன்னாரது திரு உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து சுடர் ஏற்றி மலர் தூவி இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தினர்.

இதனைத்தொடர்ந்து ஊடகங் களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -



தமிழ் மக்கள், இளைஞர்கள், யுவதிகள் வடக்குக்கிழக்கில் சிங்கள காடையர்களால் கடத்தப்பட்டும் துன்புறுத்தல் செய்யப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டுபடுகொலை செய்யப்பட்ட காலப்பகுதியில் இவ்வாறு மாணவர் சமுதாயத்தை எவ்வாறு சீரழிக்கலாம் என அப்போதைய ஆட்சியாளர்கள் கல்வி தரப்படுத்தலைமேற்கொண்டபோது பொன் சிவகுமாரன் போராட்டத்தை ஆரம்பித்தார்.

தமிழ் மக்கள் பேரவையில் முதற்செயற்பாட்டாளராகசெயற்பட்ட இவர் முதல் முதலில் சயனைட்டை உட்கொண்டுவீரமரணம்அடைந்து ஒவ்வொரு இளைஞர்கள் மத்தியில் தமிழ் உணர்வு புரட்சியை ஏற்படுத்தியவராக அவர் இன்று வரையும் திகழுகின்றார்.

ஓர் இனத்தினுடைய மாணவர்களுக்கு எதிராக இடம் பெறும் அடக்கு முறைக்கு எதிராக மாணவர்களின் எழுச்சியால் எமது இனத்துக்கான விடுதலை பயணம் நடை பெற்றுவந்தது.

கல்வியைவைத்துநடைபெற்ற இந்தப் போரிலே சிவகுமாரன் முக்கிய இடத்தை பிடித்தவர் என்பது வரலாறு என்பதுடன் இந்த தியாகி சிவகுமாரனை அடிப்ப டையாக வைத்துக் கொண்டே இதுவரைக்கும் தமிழ் மக்களின் இனவிடுதலைக்காக ஆயுதம் ஏந்திய அத்தனை இளைஞர்களும் அத்தனை போராட்ட இயக்கங்களும் உருவெடுக்க உந்துதலாக இருந்தது.

அவர் இறக்கும் போது தமிழ் இனத்துக்காக மீண்டும் பிறப்பு எடுத்து விடுதலையைபெற்றுக்கொள்வேன் என்றார் அந்தடிப்படையில் எத்தனையோ இளைஞர் யுவதிகள் ஆயுதம் ஏந்தி தமிழ் மக்களின் இனப் பிரச்சனையை உலகிற்கு தெரியப்படுத்தியுள்ளதுடன் தமிழ் மக்களுக்கு இன்றுவரை விடுதலை கிடைக்கவில்லை. ஆனால் விதைக்கப்பட்டிருக்கின்ற ஒவ் வொரு மாவீரர்களின் தியாகங்கள் விதையாக இருக்கின்றது. தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை இப்படிப்பட்ட தியாகங்கள் ஒருபோதும் வீண் போகாது என்பதுடன் எந்த அரசியல் நோக்கத்துக்காக எமது இனம் போராடியதோ அந்த அரசியல் பணியை தொடர்ந்து செய்வதற்காக பல்வேறுபட்டவகையில் இந்தப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றதுடன் அந்த வரலாற்றின் அடிப்படையில் அந்த பணியை தொடர்ந்தும் முன்கொண்டு செல்வோம். - என்றார். (05)

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பந்து இப்போது ஆளும் தரப்புப் பக்கம்

**மாகாண சபைகள் திருத்தச் சட்டமூலத்தில் அரசமைப்புக்கு முரணாக எந்த விடயங்களும் இல்லை என்று உயர் நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் முன்வைக்கப்பட்ட இந்த தனிநபர் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி தேர்தல்களை நடத்துவதற்கு இனித் தடையேதும் இல்லை என்பதால் அதனை உடனடியாகச் செய்து மாகாண சபைத் தேர்தலை நடத்த முன்வரவேண்டும் இந்த ஆட்சி.**

**2019 ஐப்பசி 7 அன்று இலங்கையில் உள்ள அனைத்து மாகாண சபைகளின் பதவிக் காலமும் முடிவுக்கு வந்ததது. அனைத்தின் பதவிக் காலமும் ஒரே தினத்தில் முடிவுக்குவரவில்லை என்றபோதும் கடைசி மாகாணமாக – 9ஆவது மாகாணமாக – ஊவா மாகாணத்தின் பதவிக் காலம் 2019 ஐப்பசி 7 முடிவுக்கு வந்ததற்கு அடுத்தநாளில் இருந்து இலங்கையில் எந்தவொரு மாகாணத்திலும் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஆட்சி இல்லை என்றாகியது.**

**2018 புரட்டாதி 26 அன்று சப்ரகமுவ மாகாணத்தின் பதவிக் காலம் முதலில் முடிவுக்கு வந்தது. அதே ஆண்டில் அடுத்தடுத்த மாதங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட 5 மாகாணங்களின் ஆட்சிக் காலம் முடிவுக்கு வந்தது. 2019 சித்திரை மாதம் 2 தென் மற்றும் மேல் மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவுக்கு வந்தது. கடைசியாக ஊவா மாகாணத்தின் பதவிக் காலம் முடிவுக்கு வந்தது. ஒவ்வொரு மாகாண சபைக்கும் அவற்றின் தேர்தல்கள் நடத்தப்பட்ட காலத்தையொட்டி பதவிக் காலம் முடிவுக்கு வந்ததும் வெவ்வேறு காலப் பகுதியாக அமைந்தது.**

**மாகாண சபைகளின் பதவிக் காலம் முடிவுக்கு வந்த 2018, 2019 காலப் பகுதியில் அதற்கான தேர்தல் நடத்தப்பட்டிருக்கவேண்டும். ஆனால் நடத்தப்படவில்லை. ஆகக் குறைந்தது கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக எந்தவொரு மாகாண சபைக்கும் தேர்தல் நடத்தப்படவில்லை. புதிய தேர்தல்கள் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கான தொகுதிப் பங்கீட்டு வேலைகளைக் காரணம் காட்டி இந்தத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டன.**

**அதேநேரம் புதிய தேர்தல்கள் சட்டத்தின் கீழ் தொகுதி மற்றும் பிரதிநிதித்துவ முறைகளில் அமைந்த கலப்புத் தேர்தல் முறைமையின் காரணமாகச் சிறிய கட்சிகள் அதிக நன்மை அடைந்தமையும் பெரிய கட்சிகள் பெரும்பான்மைப் பலத்தை உள்ளூராட்சி சபைகளில் பெற முடியாது போனமையும் காரணமாக கலப்புத் தேர்தல் முறை குறித்து சர்ச்சைகள் எழுந்தன. பெரிய கட்சிகள் மீண்டும் ஏதாவது ஒரு தேர்தல் முறைக்குத் திரும்ப வேண்டும் என்றன. சிறிய கட்சிகள் கலப்புத் தேர்தல் முறையே தொடரவேண்டும் என்றன. இந்த இழுபறியையும் காரணம் காட்டி தேர்தலை எதிர்கொள்ள அச்சமடைந்திருந்த அன்றைய நல்லாட்சி அரசு மாகாண சபைத் தேர்தலை ஒத்தி வைத்தது. ராஜபக்சக்கள் மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றியபோது அவர்களும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் ஆர்வம் காட்டவில்லை.**

**இதனால் மாகாண சபைத் தேர்தல்கள் பலவருடங்களாக நடத்தப்படாத நிலையை முடிவுக்குக் கொண்டு வரும் கையில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால், பழைய தேர்தல் முறைமைக்குத் திரும்பி மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு வழி ஏற்படுத்தும் வகையில் தனிநபர் சட்டமூலமாக மாகாண சபைகள் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. அது உயர் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது. இப்போது அரசமைப்புக்கு முரணாக அதில் எதுவும் இல்லை என்று உயரர் நீதிமன்றமே வெளிப்படுத்திவிட்டது.**

**இனி எந்தத் தடையும் இல்லாமல் மாகாண சபைகள் திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றி அதற்கூடாக மாகாண சபைத் தேர்தல்களை நடத்த இந்த ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். காலதாமதம் ஏற்படுத்தாமல் அதனைச் செய்யவேண்டும்.**

# உள நோயாளியாக மாறுகிறார் அலி சப்ரி

## சிறிதரன் எம்.பி. காட்டம்

ஈழத்தமிழர்களின் தேசிய விடுதலை என்பது இலங்கையின் வாழும் தமிழ்மக்கள், புலம்பெயர் தேசங்களில் வாழும் இலங்கைத் தமிழ்மக்கள் மற்றும் இந்தியவாழ் தமிழ்மக்கள் ஆகிய முத்தரப்பினரின் முயற்சிகளை அடிப்படையாகக்கொண்டது என்றுதாம் உறுதியாக நம்புவதாகவும், எனவே இவ்வாறானதொரு பின்னணியில் அமைச்சர் அலி சப்ரி வெளியிட்டுள்ள கருத்தைக் கடுமையாகக் கண்டித்துநிராகரிப்பதாகவும் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழர் தொடர்பான வெள்ளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் கருத்துக்கு கண்டனம் வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், இதுபற்றி மேலும் கூறுகையில் -

இலங்கையில் மீண்டுமொரு மோதல் உருவாக வேண்டும் என்ற புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ் மக்கள் ஒருபோதும் விரும்பவில்லை. மாறாக, அவர்கள் இனப்பிரச்சினைக்கான தீர்வையே கோருகின்றனர். அவ்வாறிருக்கையில் வெளிவிவகார அமைச்சராகப் பதவிவகிக்கக்கூடிய அலி சப்ரியின் வெளிநாட்டுப் பயணங்களின்போது, இவ் விடயம்பற்றிய அழுத்தங்கள் மிகவும் வலுவானதாக மாறிவருகின்றன. அந்த அழுத்தத்தைப் பொறுத்துக் கொள்ளமுடியாமல்தான் அண்மையில் இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பில் ருவிட்டர் பதிவொன்றைச் செய்திருந்தார். அதன் தொடர்ச்சியாகவே இந்தக் கருத்தையும் பார்க்க வேண்டியிருக்கின்றது. அவர் படிப்படியாக உளநோயாளியாக மாறிவருகின்றார். முன்னாள் போராளிகளைப்போன்று அவருக்கும் புனர்வாழ்வுமற்றும் உளவள ஆலோசனை ஆகியவற்றை வழங்கவேண்டியிருக்கின்றது. அதன்மூலமாக



வேனும் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல், மோதலின் பின்னரான இன ஐக்கியம் ஆகியவற்றின் உண்மையான தாற்பரியம் குறித்தும் அவற்றை எவ்வாறு மேற்கொள்வது என்பது பற்றியும் அவர் அறிந்துகொள்ளட்டும்.

எமது நாட்டின் வரலாற்றைப் பொறுத்தமட்டில் இன சிறுபான்மையினரான தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒரே நேர்கோட்டில் ஒருமித்துப் பயணிக்கக் கூடாது என்பதில் அரசாங்கங்கள் கவனமாக இருந்து வந்திருப்பதுடன் அதில் வெற்றியும் கண்டிருக்கின்றன. அதன்தொடர்ச்சியாகதற்போது அரசாங்கத்தால் அமைச்சர் அலி சப்ரியும் ஓர் ஆயுதமாகவே பயன்படுத்தப்படுகின்றார் என்று குறிப்பிட்டார். (05)

# புலம்பெயர் உறவுகளுக்கும் எமக்கும் இடையிலான நல்லுறவை சீர்குலைப்பதே அலிசப்ரியின் நோக்கம்!


## விக்னேஸ்வரன் கண்டனம்

இலங்கைவாழ்தமிழ்மக்களுக்கும், புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழ் மக்களுக்கும் இடையில் நிலவும் நல்லுறவை சீர்குலைக்கவேண்டும் என்ற நோக்கிலேயே அமைச்சர் அலி சப்ரி இத்தகையதொருகருத்தைவெளியிட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டிய தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன், அக்கருத்தை முற்றாக நிராகரிப்பதாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

புலம்பெயர்தமிழ்மக்கள் எமக்கு அவசியமான நிதியுதவிகளை வழங்கிவருகின்றனர். இருப்பினும் அதற்குப் பதிலாக அவர்களது தேவைக்கேற்றவாறு அல்லது நிபந்தனைகளுக்கு அமைவாகச் செயற்படவேண்டும் என்று அவர்கள் ஒருபோதும் கூறியதில்லை. மாறாகநாம்எமதுநாட்டின்நிலைவரத்தைக்கருத்திற்கொண்டு அதற்கேற்றவாறு செயலாற்றிவருகின்றோம்.

அவ்வாறிருக்கையில்நாம் புலம்பெயர்தமிழ் அமைப்புக்களுடனோ அல்லது மக்களுடனோ இணைந்து செயற்படக்கூடாதுஎன்றுகூறுவதாக இருந்தால், முதலில் எமது பிரச்சினைக்குரிய தீர்வை



அரசாங்கம்வழங்கவேண்டும். அதற்குரியதிட்டத்தைஎம்மிடம் கையளிக்கவேண்டும்.அதனை விடுத்து இவ்வாறான கருத்துக்களை வெளியிடுவதால் எதுவும்நடக்கப்போவதில்லை. - என்றும் விக்கினேஸ்வரன் சுட்டிக்காட்டினார். (05)

# பதவிக்காக வெளியிடும் அலிசப்ரியின் கருத்து முஸ்லிம் மக்களுக்கும் அழிவை ஏற்படுத்தும்

## கஜேந்திரன் எம்.பி. ஆதங்கம்



சுயநிர்ணயஉரிமையை மீட்டெடுக்கும் நோக்கில் முன்னெடுத்துவரும்போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் அமைச்சர் அலி சப்ரி வெளியிட்டுள்ள கருத்தைக் கடுமையாகக் கண்டிக்கின்றோம். அரசாங்கத்திலிருந்து கிட்டும் ஒரு பதவிக்காக அவர் வெளியிடுகின்ற இத்தகைய கருத்துக்கள், சிறுபான்மையின தமிழர்களுக்குமாத்திரமன்றி முஸ்லிம் மக்களுக்கும் அழிவை ஏற்படுத்தும்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின்நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் இவ்வாறு ஆதங்கம் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் இலங்கையில் சமஷ்டி முறையிலான தீர்வையும் கடந்தகால மீறல்களுக்கானநீதியையுமே கோருகின்றார்கள். இலங்கையின் ஒற்றையாட்சி முறை மற்றும் அதன்கீழ் நிகழ்ந்த அடக்குமுறைகளின் விளைவாகவே அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். எனவே அமைச்சர் அலி சப்ரி தனது பதவியைத் தக்கவைத்துக்கொள்ளும் நோக்கில் பேசுவதைவிடுத்து ஒரு சட்டத்தரணி என்ற ரீதியில் உண்மையைப் புரிந்துகொண்டு மனிதாபிமானத்துடன் பேசவேண்டும். - என்றுவலியுறுத்தினார். (05)

# இலங்கை – மாலைதீவு கூட்டு ஆணைக்குழு கூட்டத் தொடர் இன்று கொழும்பில் ஆரம்பம்!

இலங்கை - மாலைதீவு கூட்டு ஆணைக்குழுவின் 4 ஆவது கூட்டத்தொடர் இன்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகி நாளை (புதன் கிழமை) வரை நடைபெறவுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள வெளிவிவகார அமைச்சில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள இக்கூட்டத்தொடருக்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி மற்றும் மாலைதீவின் வெளிவிவகார அமைச்சர் அப்துல்லாஷாஹிட் ஆகியோர் தலைமைதாங்கவுள்ளனர்.

அதேவேளை இன்றைய தினம்மேற்படிகூட்டுஆணைக்குழுவின் அமைச்சுமட்ட சிரேஷ்ட அதிகாரிகளுக்கான கூட்டம் நடைபெறவுள்ளது.

இதன்போதுஇருநாகளுக்கும்இடையிலானநல்லுறவில் அடையப்பட்டுள்ள முன்னேற்றம், புதிய செயற்திட்டங்கள், வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, சுற்றுலா, மீன்பிடி, கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, திறன் அபிவிருத்தி என்பன உள்ளடங்கலாக இருநாடுகளினதும் அக்கறைக்குரிய துறைகள் மற்றும் விவகாரங்களில்இருதரப்புஒத்துழைப்பை வலுப்படுத்தல்என்பனதொடர்பில் விரிவாக ஆராயப்படும் என்றுஎதிர்பார்க்கப்படுகின்றது.

அதுமாத்திரமன்றிஇந்தக் கூட்டு ஆணைக்குழுவின் கூட்டத்தொடரை அடுத்து இருநாடுகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்படவுள்ளன. (05)